சித்திர ராமாயணம்

201. புதிய புத்திர ஸ்வீகாரம்

ராமன் தாயைப் பரதன் குகனுக்கு அறிமுகப்படுத்துவதென்றால் சாதாரண வாய்ப் பேச்சோ, பாஷையோ, வாக்கு வன்மையோ, போதுமா? தன் இதயத் துடிப்பை, உள்ளுக்குள்ளே கிடந்த ஆத்திரத்தை, பொங்கிய உணர்ச்சி - வெள்ளத்தை அப்படியே வெளியிட்டு விட்டானல்லவா? அந்தப் பரதனையும், குகனையும், ராமன் தாயையும் அப்படியே கவிதைப் படமாய்ப் பார்த்தோம். ஆனால், பரதனுடைய உணர்ச்சிகளைக் கவனிக்கக் குகனுக்கு அவகாசம் ஏது?

துக்கம் கொண்டாடும் பாஷை

'ராமனைப் பெற்ற தாய்' என்று தெரிந்ததும், தன் உணர்ச்சிக்குள்ளே தன்னை இழந்துவிடும் குகன் சாஷ்டாங்கமாய்க் கோசலையின் காலில் விழுகிறான், அழுகிறான். ஒரு குழந்தையைப்போல் அழுகை தவிர வேறு பாஷை தெரியவில்லை. (காட்டு மனிதனாகிய குகனுக்குப் பொதுவாகவே பாஷை நன்றாக வராது; வாக்குவன்மையும் கிடையாதே.)

பாஷையில் பயிற்சி பெற்ற, பேச்சுத் திறமை வாய்ந்த, நகரவாசிகளுக்கே சக்கரவர்த்தினியிடம் தங்கள் பயிற்சித் திறமை தோன்றத் துக்கம் விசாரிப்பது அநாகரிகம். "மகாராணியாரே! உமது அருமைத் திருமகனார் நாடு துறந்து காடு செல்லும்படி ஆயிற்றே; கணவனாரும் காலஞ் சென்றாரே; மாங்கலியப் பாக்கியத்தையும் அரசுச் செல்வத்தையும் ஒருங்கே இழக்கும்படி விதியார் விளைத்த வினை! என் செய்வது?" என்றெல்லாம் துக்கம் கொண்டாடுவது நாகரிகம் ஆகுமா? நாகரிகம் தெரியாத காட்டரசனுடைய பக்தியும் இதயப் பண்புமோ துக்கம் விசாரிக்கவே துணியவில்லை.

துன்புற்ற அன்பரைச் சந்தித்ததும் அன்பருக்கு இயல்பாக வருவது பாஷையன்று, அழுகை தானே? தன்னை அறியாமலே அழுகை துக்கம் கொண்டாடுகிறது. அன்புக் கண்ணீரை அணைபோட்டுத் தடுக்க முடியாது. இந்த அன்பர்களோ (கோசலையும் குகனும்) ஒருவரை யொருவர் இதற்குமுன் சந்தித்ததும் இல்லை. குகனாவது கோசலையையும் அவளுடைய ஒப்பற்ற தியாகத்தையும் கேள்விப் பட்டிருக்கிறான். கோசலையோ இந்த வேடனைக் கண்டது மில்லை, இவனைக் குறித்துக் கேட்டது மில்லை.

குகனுடைய இதயம் நீராய் உருகிக் கண்ணீராய் வெளிப்பட்டுத் துக்கம் கொண்டாடும் இந்நிலையைக் கவிஞன் சுருக்கமாகவும் துலக்கமாகவும் குறிப்பிட விரும்புகிறான். என், 'அழுவானை' என்ற ஒரே சொல்லால் குறிப்பிட்டு விடுகிறான்.

'உம்முடைய பிள்ளையல்லவா?'

"என்னுடைய துன்பத்தில் இவ்வளவு அனுதாபம் காட்டுகிறானே, பார்த்தால் காட்டு மனிதன்: இவன் யாரோ?" என்று உடனே கேட்கிறாள் கோசலை. உடனே பதில் வருகிறது பரதன் வாயிலிருந்து. இந்நிலையில் இம்மூவர் இதயங்களையும் ஒருங்கே படம் பிடித்துக் காட்டும் பாட்டு முழுமையும் பார்க்கலாமே:

என்றலுமே அடியின்மிசை
நெடிதுவிழ்ந்(து) அழுவானை
'இவன் யார்?' என்று
கன்றுபிரி காராவின்
துயருடைய கொடிவினவக்,
கழற்கால் மைந்தன்,
'இன்துணைவன் இராகவனுக்(கு),
இலக்குவதற்கும் இளையவற்கும்
எனக்கும் மூத்தான்,
குன்றனைய திருநெடுந்தோள் -
குகன்என்பான் இந்நின்ற
குரிசில்' என்றான்.

[அடியின்மிசை — அடியில். கன்று பிரி கார்ஆவின் — கன்றை விட்டுப் பிரிந்த கறவைப் பசுவைப் போல். துயருடைய கொடி — (ராமனை விட்டுப் பிரிந்த) துயரத்தோடு கூடிய கோசலாதேவி. கழற்கால் மைந்தன் — வீரனான பரதன். இன்துணைவன் இராகவனுக்கு — இராமனுக்கு இனிய நண்பன். இலக்குவன் — லட்சுமணன். இளையவன் — சத்துருக்னன். மூத்தான் — மூத்தவன். குன்று அனைய — குன்றை ஒத்த. திருநெடுந்தோள் — பார்க்க அழகான, வலிமை வாய்ந்த, பெருந்தோள்களை உடைய. குகன் என்பான் — குகன் என்ற பெயரால் அழைக்கப் பெறுகிறவன். இந்நின்ற குரிசில் — இதோ நிற்கிற அரசன்.]

அழுவானை "இவன் யார்?" என்று கோசலை கேட்கும் கேள்வியில், "இந்த அன்னியன் இப்படி அழுகிறானே, இவ்வளவு அன்பிற்குக் காரணம்தான் யாதோ?" என்ற வினாவும் தொனிக்கிறது. இந்தத் தொனிக் கேள்வியை உய்த்துணர்ந்து கொண்டு முதலில் பதில் சொல்லி விடுகிறான் பரதன். "அன்னியனா? உம்முடைய புதல்வன் அல்லவா?" என்று தொனிக்கும்படி,

இன்துணைவன் இராகவனுக்(கு)

என்று பதில் சொல்லுகிறான். ராமனுக்கு இனிய துணைவன் கோசலைக்கு அருமைப் புதல்வன் என்பதை வெளிப்படையாகச் சொல்லவில்லை. "ராமனுக்குத் தம்பியாகிய இவன் லட்சுமணனுக்கும் சத்துருக்னனுக்கும் எனக்கும் தமையன்" என்று மாத்திரம் சொல்லுகிறான்.

இவ்வுறவினால் கிடைத்து விட்ட ராஜகுலத்தையும்,—அக்குலப் பொருத்தம் குகனுக்கு உண்டு,—குகனுடைய தோற்றத்திலேயே காணக்

கிடக்கிறது என்பதையும், "இவன் யார்?" என்ற வினவிற்கு நேர் விடையான பெயரையும் பரதன்,

குன்றனைய திருநெடுந்தோள் —
குகன்என்பான் இந்நின்ற
குரிசில்

என்று தெரிவித்துத் தன் பேச்சை முடிக்கிறான்.

அழுவானை, "நம்மைப் போன்ற அரசன், நம்முடைய குலத்தோடு ஐக்கியப்பட்ட அரசன்" என்று அறிமுகப்படுத்திய பரதனுடைய குணாதிசயத்தை என்னென்பது? ராமன் குகனோடு கொண்டாடிய சகோதர உறவு இப்போது பரதனால் அங்கீகரிக்கப்படுகிறது.

இதுகூட அதிசயம் இல்லை; இவ்வுறவை வயது முதிர்ந்த கோசலையும் அங்கீகரிக்கப் போகிறாள்! இத்தகைய உறவைப் பார்த்த அனுபவமுள்ள ஆண்மக்கள் அங்கீகரித்தாலும் பெண்கள் அங்கீகரிப்பது அரிது என்பதை இந்நாளில் உள்ள சமூகச் சீர்திருத்த வாதிகளும் நன்கு அறிவார்களே!

ஸ்வீகாரம்

குகன் கோசலை காலில் விழுந்து அழுததும், பரதனுக்கும் கண் கலங்கி விட்டது. சத்துருக்னனும் கண்ணைத் துடைத்துக் கொண்டான்.



அம்மூவரையும் அக்னியில் பார்த்ததும் மூவரும் தன் மைந்தர்கள் என்றே தெரிந்து விடுகிறது கோசலைக்கு. "என்ன பாக்கியம் பெற்றேன்! அங்கே, காட்டுக்குள்ளே, இரு மைந்தர்; இங்கே மும்மைந்தர்" என்று நிர்மானிக்கிறாள். அப்படியே ஆசி கூறுகிறாள்.

கோசலையின் இதயம் உண்மையாகவே ஆறுதல் அடைகிறது. மூன்று மைந்தர்களையும் நோக்கித் தாயுள்ளம் பேசுகிறது :

'நைவீரலீர் மைந்தர்!
இனித்துயரால் நாடிறந்து
காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும்
நலமாயிற் றன்றே :
விலங்கல் – திண்தோள்
கைவீரக் களிறனைய
காளை இவன் தன்னோடும்
கலந்து, நீவிர்
ஐவிரும் ஒருவிராய்
அகலிடத்தை நெடுங்காலம்
அளித்திர்!' என்றாள்.

[நைவீர் அலீர்–வருத்தப் படவேண்டாம். மைந்திர்–மைந்தர்களே. நாடு இறந்து–நாட்டை விட்டு. மெய்வீரர்-சத்தியத்தின் போர்வீரர்கள். பெயர்ந்ததுவும்-போனதும். அன்றே-அல்லவா? விலங்கல் திண்தோள்-மலைபோன்ற வலிமை வாய்ந்த தோள்கள். கை-துதிக்கை. வீரக் களிறு அனைய-வீரமுள்ள யானையை ஒத்த. காளை இவன்–வீரனான குகன். நீவிர்-நீங்கள். ஐவிரும் ஒருவிராய்–நீங்கள் ஐவரும் ஒருவராக. அகலிடத்தை–அகன்ற ராஜ்யத்தை. அளித்திர்-ஆள்வீராக.]

அம்மூவர் கண்களும் கலங்கியது கண்டு இதயத் தெளிவும் ஆறுதலும் பெற்ற தாய், "என் அருமைப் பிள்ளைகளே! நீங்கள் துயரத்தால் ஏன் வருந்த வேண்டும்?" என்றே கேட்க ஆரம்பித்து விட்டாள். ராம லட்சுமணர் நாடு நீங்கிக் காடு சேர்ந்ததும், தன் மக்கள் நால்வரில் இருவரை இழக்கும்படி வந்ததே கேடு–என்று பரிதவித்தவள் தான். இப்போது "அது கேடன்று; நன்மைதான்!" என்று சொல்லத் தோன்றுகிறது. ஆம், நால்வரை ஐவராக்கிய நன்மையாகி விட்டதாம், இருவர் காடு சென்றதும். அவர்கள் குகனைச் சகோதரனாகப் பெற்றதனால், கோசலைக்கு ஐந்து பிள்ளைகள்! "இவனோடு சேர்ந்து நீங்கள் ஐவரும் ஒருவராகவே விசாலமான கோசல நாட்டை அரசாள வேண்டும்" என்று ஆசீர்வதிக்கிறாள்.

ராமன் குகனோடு கங்கைக் கரையில் சகோதர உறவு கொண்டாடும் போது, ராஜ்யம் ஆளும் தன் உரிமையிலும் குகனுக்குப் பங்கு உண்டு என்று ஒப்புக் கொண்டான். அது கோசலைக்குத் தெரியாது. ராமன் ஒப்புக் கொண்ட அந்த உரிமையையும்-கோசலை இப்போது ஒப்புக் கொள்கிறாள். என்ன தாயுள்ளம்! ராமன் தாய் என்ற பெருமை தானா உரியது இப் பெரியாளுக்கு? "தாயைப் போல பிள்ளை; நூலைப் போல சேலை" என்ற தமிழ்ப் பழமொழியின் உண்மைக்கே பேரிலக்கியம் அல்லவா?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

202. மூன்று தாய்மார்

ரவீந்திரநாத தாகுர் நோபல்பரிசு பெற்ற காலத்தில், ஐரோப்பா அளித்த அந்தப் பரிசுப் பொருள் கவீந்திருக்குப் பெரிதாகத் தோன்ற வில்லை. 'தூரத்தைச் சமீபமாக்கி அன்னியரைச் சகோதரராக்கிக் கொண்ட அன்பே' பெரிதாகத் தோன்றியது அந்தப் பண்பட்ட, பொன் னன, கவிதை யுள்ளத்திற்கு. அன்னிய வேடனைத் தன் மகனுக்கி விட்ட அந்த அன்பின் பெருமையிலே கோசலாதேவியோ முன்னிலும் உயர்ந்து விட்டாள்.

பண்பட்ட தாயுள்ளம்

இந்த உயர்விலே, 'நான் சக்கரவர்த்தினி, அவனோ கேவலம் வேடன்' என்ற உயர்வு - தாழ்வு முழுக்க மறந்துபோகிறது. அழுத பிள்ளைக்கு (குகனுக்கு) ஆறுதல் கூறுகிறாள். தொழுத பிள்ளையை (பரதனை) வாழ்த்தித் தேற்றுகிறாள். தன்னையும் தேற்றிக் கொள்கிறாள்.

ராமன் தாயின் இத்தாய்மையை என்னென்பது? இவளது 'உயர்' குடிப்பிறப்பு, வளர்ப்பு முதலிய மேம்பாடுகளை உள்ளபடியே உயர்த்தி விட்ட பண்பாட்டைத் தான் என்னென்பது? இத்தாயின் குணாதிசயம் ராம குணாதிசயத்தை உருவாக்கியதில் தான் என்ன அதிசயம்?

யாகத்தால் பெற்றெடுத்த நாலு குழந்தைகளோடு தியாகத்தால் பெற்ற ஐந்தாம் குழந்தையாகக் குகனையும் அணைத்துக் கொஞ்சும் இத் தாயன்பு, எவ்வளவு சாந்தமாக, இதய சாந்தி பரிமளிக்க, 'ஐவீரும் ஒருவீராய் அரசு புரிவீர்' என்று ஆசிசொல்லுகிறது!

இப்பாட்டை ஓதி ஓதி உணர வேண்டும், பாடிப் பாடிப் பார்க்கவேண் டும். பாட்டின் பொருளில் மட்டுமல்ல, ஓசையிலும் ஊடுருவிக் கிடக்கும் இதய ஆறுதலை உணர்ந்து கொள்வீர்கள். அந்தப் பண்ணழகிலே கோசலை யின் சாந்தி பரிமளிக்கக் காண்பீர்கள்—தென்றலில் பரிமளிக்கும் பூமணம் போலே.

பிறகு குகன் கோசலையின் பக்கத்திலே நின்ற சுமித்திரையை நோக்குகிறான். ஒரு பெண்ணோ, ராணியோ நிற்பது போலவா தோன்றுகிறது? அறமே ஓர் உருவம் கொண்டு அப்படி நிற்கிறது—என்று தோன்றுகிறது கவிஞனுக்கு. குகனுக்கோ, கோடையில் மாலை வேளையிலே நீர் நிறைந்த ஒரு பெரிய குளக்கரையை அடைந்தது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. ஆம், அன்பு நிறைந்து ததும்பும் தடாகம் அந்த அறப்பெருஞ் செல்வி, இளைய ராணி. தென்றல் கொணர்ந்து தெளிக்கும் திவலைகள் போல் அன்புத் திவலைகள் குகனுள்ளத்தைக் குளிர்விக்கின்றன.

இளையராணியை அறிமுகப் படுத்துதல்

குகன் பரதனை நோக்கி, 'ஐயா! இவர் யார்?' என்று கேட்கிறான். இந்தக் கேள்வியையும் பரதனது விடையையும் இதோ கேளுங்கள்; சுமித்திரை நிற்கும் அந்த நிலையையும் பாருங்கள் :

அறந்தானே என்கின்ற
அயல்நின்றாள் தனைநோக்கி,
'ஐய! அன்பின்
நிறைந்தானை உரை' என்ன,
'நெறிதிறம்பாத் தன்மெய்யை
நிற்ப நாக்கி
இறந்தான்தன் இளந்தேவி,
யாவர்க்கும் தொழுகுலமாம்
இராமன் பின்பு
பிறந்தானும் உளன்என்னப்
பிரியாதான் தனைப்பயந்த
பெரியாள்' என்றான்.

[என்கின்ற-என்று சொல்லத்தக்க. உரை-(இன்னாரென்று) உரைப்பாயாக. நெறி – தரும நெறி. திறம்பா – திறம்பாத; விட்டு விலகாத. தன் மெய்யை – தன் பிறவியோடு ஒட்டிக்கொண்டது போலிருக்கும் சத்தியத்தை. தொழுகுலமாம் – தொழுதற்கு உரிய தெய்வமாகிற. பயந்த – பெற்றெடுத்த.]


அறமே உருவெடுத்து வந்து நிற்பதுபோல் கோசலாதேவிக்கு அருகே நின்ற சுமித்திரா தேவியைக் குகன் நோக்கி, 'பரதனே! அன்பு நிறைந்த இந்த அம்மான் யார்? தெரியவில்லையே, இன்னாரென்று சொல்லவேணும்' என்று கேட்டதும், பரதன் பதில் சொல்லத் தொடங்கினான். சக்கரவர்த்தியின் முதல்தேவி என்று கோசலா தேவியைத் தெரிவித்தவன், உண்மைக்காக உயிரைக் கொடுத்த தியாக மூர்த்தியின் இளந்தேவி என்று சுமித்திரையை அறிமுகப் படுத்துகிறான்.

தசரதர் சக்கரவர்த்தியாகவும் பெரியவர்; மனிதராகவும் பெரியவர். சிற்றரசர்கள் தலைவாசலிலே வந்து காத்து நிற்கும் அவ்வளவு பெரிய சக்கரவர்த்தி. தனிமனிதராகப் பார்த்தால் இன்னும் பெரியவர் : சத்தியத்தை விட்டு ஓர் அங்குலம் விலகத் தெரியாமல், அவ்வளவு நெருங்கித் தன் பிறவியோடு பிறவியாக ஒட்டிப்போன அந்தச் சத்தியம் இவ்வுலகில் நிலைநிற்பதற்காகத் தம் உயிரையே கொடுத்து விட்டாராம். அத்தகைய சக்கரவர்த்திக்குத் தகுந்த பட்டமகிஷி கோசலாதேவி என்றால்,

இத்தகைய தியாக வீரருக்கு இசைந்த தருமபத்தினி சுமித்திராதேவி என்கிறான் பரதன். 'வேந்தர் வைகும் முற்றத்தான்' அதாவது — 'சக்கரவர்த்தியாக வாழ்ந்தவனின் முதல்தேவி' என்று கோசலையைக் குறிப்பிட்டவன், 'இறந்தான்தன் இளந்தேவி' என்று சுமித்திரையைக் குறிப்பிடுகிறான். பரதனுடைய உண்மை நிறைந்த இதயம் பேசுகிறது எல்லையற்ற சோகத்துடன் : இல்லையா ?

பிறகு, புத்திர சம்பத்திலும் சுமித்திரா தேவி கோசலா தேவிக்குக் குறைந்தவள் இல்லை என்கிறான். ராமனைப் பெற்றுத் துறந்த பெருமை கோசலைக்கு உண்டென்றால், இளையவனைப் பெற்றுத் துறந்த பெருமை இளந்தேவிக்கு உண்டல்லவா ? இப்பெருமைதான் கொஞ்சமோ ? காட்டிலும் போய் ராமனுக்குப் பணி செய்து கொண்டிருக்கும் லட்சுமணனை நினைத்துப் பார்த்ததும், உணர்ச்சி பொங்குகிறது கங்கை வெள்ளம் போலே. "அவன் ஒருவன் தானே "ராமன் தம்பி" என்ற பெயருக்கு உரியவன் ? லட்சுமணன் இல்லையென்றால், ராமனுக்குத் தம்பியாக யாரும் பிறக்கவில்லை, என்று தானே கருத வேண்டியிருக்





கும்?'' — இது பரதன் நினைப்பு. தானும் சத்துருக்னனும் தம்பியாக இல்லையாம், ராமனுக்குப் பயன்படாததால், பணிசெய்யாததால். ஆகவே, சுமித்திரா தேவியை, 'ராமனுக்குப் பின்னே பிறந்த தம்பியும் ஒருவன் உண்டு என்பதை மெய்ப்பித்துப் பிரியாது பணிசெய்து கொண்டிருக்கும் லட்சுமணனைப் 'பெற்றுத் துறந்த பெரியாள்' என்று அறிமுகப் படுத்துகிறான் குகனுக்கு.

கோசலாதேவியாவது தன் கணவரும் சக்கரவர்த்தியுமான தசரதரின் ஆணையை அனுசரித்துத் தன் புதல்வனான ராமனைக் காடு செல்ல அனுமதித்தாள்; மனவருத்தத்துடன் விடை கொடுத்தனுப்பினாள். சுமித்திரா தேவியோ, அத்தகைய ஆணையொன்றும் இல்லாதிருக்கவும், அன்பு நிறைந்த இதயத் தூண்டுதலால் ராமனுக்குப் பணி செய்யத் தன் புதல்வனான லட்சுமணனைக் காட்டுக்கு மனமுவந்து அனுப்பி வைத்தாள். இதனால் தான், 'அறம்தானே என்கின்ற' என்று கவிக் கூற்றும், 'அன்பின் நிறைந்தாளை' என்று பரதன் வாக்கும் சுமித்திரையை மேம்படுத்துகின்றன.

கைகேயி நிலை

இச் செய்யுள் சக்கரவர்த்தியின் மூன்றாம் மனைவியான சுமித்திரையைக் கோசலையின் பக்கத்தில் நின்றதாய்க் குறிப்பிடுவதால், இரண்டாம் மனைவியான கைகேயி சிறிது தூரத்தில் விலகி நிற்பதாய் ஊகித்துக் கொள்ளவேண்டும். இது அந்த இதயங்களுக்கு இடையே உள்ள பெருந் தூரத்தை நினைப்பூட்டுகிறது. ராமன் தாய்க்கு அருகே நிற்கவும் கூசுகிறது பரதன் தாயின் உள்ளம். தான் இழைத்த கொடுமையை நினைவு கூர்ந்து ஒதுங்கி நிற்பதாகவும் ஊகிக்கலாம். கைகேயிக்குப் பச்சாதாபம் ஏற்பட்டிருக்கிற தென்று கருதுவதும் தவறாகாது. இல்லாவிட்டால், ராமனை அழைத்துப் போக வந்திருக்கும் பரதனைத் தொடர்ந்து வந்திருக்க வேண்டாமே!

தன் மகனுக்காகத்தான் பெற்றிருந்த இராஜ்யத்தைத் 'தீவினை' போலத் தள்ளி விட்டுக் காடு நோக்கிய அம்மகனுடைய சொல்லும் செயலும், கைகேயின் கொடுமை என்ற அம்மனநோயை ஒருவாறு குணப்படுத்தி விட்டன என்று கருதலாம். 'மகனுக்கு மணிமுடியா தேடிக் கொடுத்தோம்? முள்முடி சூட்டி ஹிம்ஸித்து விட்டோமே!' என்ற வருத்தம் இந்தத் தாயுள்ளத்தையும் துருவி யிருக்கவேண்டும்—தேங்காய் துருவுதல் போல. கைகேயி முற்றும் திருந்த, இத்துருவல் இன்னும் அதிகரிக்கவேண்டும்; இந்தப் பச்சாதாபம் பூர்த்தியாக வேண்டும்.

ராமன் தாயையும் லட்சுமணன் தாயையும் குகனுக்கு அறிமுகப் படுத்திய பின், பரதன் தன் தாயையும் அறிமுகப் படுத்துகிறான். இவன் அறிமுகப் படுத்தும் முறையே, கைகேயியின் பச்சாதாபத்தைப் பூர்த்தி செய்து அவளை முற்றும் திருத்தி விடுகிறது என்று ஊகிக்கலாம்.

கவியின் கொதிப்பு

பரதன் அறிமுகப் படுத்துவதற்கு முன்பு கவிக்கூற்றே மிகவும் கடுமையாக வந்து விழுகிறது. 'சுமித்திரா தேவியைச் சொன்ன வாயால் கைகேயி தேவியையும் சொல்ல வேண்டி யிருக்கிறதே!' என்ற கவியுள்ளம் திகைக்கிறது. 'ஐயோ, கொடிய கைகேயியும் குகன் பார்வைக்கு இலக்காகி விடுவாளே; யார் என்று கேட்டு விடுவானே!' என்ற திகைப்புடன் உள்ளக் கொதிப்பும் கவிக்கூற்றாக வெளிப்படப் போகிறது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

203. தாயையும் பழித்தான்!

கோசலாதேவியை ராமனைப் பெற்றுத் துறந்த பெரியாள் என்றும், சுமித்திரா தேவியை இளையவனைப் பெற்றுத் துறந்த பெரியாள் என்றும், பரதன் கூற்றாகக் கூறிவந்த கவிஞன், கைகேயி அம்மாளையும் 'பெரியாள்' என்று தன் கூற்றாகப் பேச விரும்புகிறான். அவர்கள் துறவிலே, அறத்திலே, அன்பிலே பெரியவர்கள் என்றால், கைகேயி தேவி கொடுமையில் பெரியாள் என்று குறிப்பிடுகிறான்.

கொடுமையால் உலகளந்தாள்

இப் பெருமைதான் கொஞ்சமோ? நெடுமால் நெடுமையால் அளந்த உலகமெல்லாம் கொடுமையால் அளந்து விட்டாளாம் கைகேயி. எப்படி? காதல் மைந்தனைக் காடு போக்கினாள்; காதலரைச் சுடுகாடு போக்கினாள்; பெற்ற பிள்ளையைக் கடலிலே தள்ளினாள் — துயரப் பெருங் கடலில் ஆழ்த்தி விட்டாள். குற்றச் சீட்டு மிகச் சுருக்கமாய்த் தானிருக்கிறது; ஆனால் இதில் கிடக்கிறது கொடுமையின் நெடுமை — ஆலின் சின்னஞ் சிறு விதையில் கிடக்கும் ஆலமரம் போல,—குள்ளனுக்குள்ளே குறுகிக் கிடந்த நெடுமால் போல.

இவ்வளவு கொடுமையையும் எவ்வளவு கடுமையாக வெளியிடுகிறது இக்கொடுங் கனல்-பாட்டு:

சுடுமயா னத்திடைத்தன்
துணைஏகத், தோன்றல்துயர்க்
கடலின் ஏகக், —
கடுமையார் கானகத்துக்
கருணைஆர் கலிஏகக், —
கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த
உலகெல்லாம், தன்மனத்தே
நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை,
'யார்இவர்என்று உரை' என்னக்,
குரிசில் கூறும்.

[சுடுமயானம் — சுடுகாடு. துணை — உயிர்த்துணையான கணவர். ஏக — போக. தோன்றல் — புதல்வனான பரதன். கடலின் ஏக — கடலில் மூழ்க. கடுமை ஆர் — கடுமை நிறைந்த; கடினமான (கல்லும் முள்ளும் நிறைந்த). கருணை ஆர்கலி — கருணைக் கடலான ராமன். கழல் — வீரக் கழல். மாயன் — திருமால். நெடுமையால் அன்று அளந்த — அக்காலத்தில் நீண்டு வளர்ந்து (மூவடி மண்ணுக்கென்று) அளந்த. உரை — சொல்லு. குரிசில் — தலைவனான பரதன்.]

'அறியாது செய்த கொடுமையன்று கைகேயி செய்த கொடுமை; ஆராய்ந்து பார்த்து அறிவோடு துணிந்து செய்தது' என்பதைத் 'தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமை' என்று வற்புறுத்துகிறான் கவிஞன். இக்கொடுமை பரவாத இடமில்லையாம்: ஈரடியால் மூன்றுலகும் அளந்த திருமாலின் பாதம் பரவாத இடம் உண்டா?

அமுத நாக்கும், அனல் நாக்கும்

இக் கவிஞனே வேறோரிடத்தில், 'கைகேயி என் செய்வாள், பாவம்?' அரக்கர் பாவமும், அல்லாதார் அறமும் சேர்ந்து கொண்டதால், கைகேயி இரக்கம் துறந்தாள்! இந்த இரக்கமின்மை தானே "ராமன் புகழ்" என்ற அமிர்தத்தை உலகம் அள்ளிப் பருகுவதற்குக் காரணம்?' என்று பொருள்படத் தன் அமுத நாவால் பாடியிருக்கிறான். 'எத்தனையோ வளையங்களால் இயன்ற சங்கிலித் தொடரன்றோ விதி? இவ்விதிக்கு ஒரு கருவி கைகேயி அம்மாளும்' என்பது உட்பொருள்.

விதியின் இதிகாசத்தை அப்படி உணர்ந்திருக்கும் கவிஞனும் இங்கே நிதானம் தவறிவிட்டது போல் இப்படிக் கொதித்துப் பேசுகிறான். பரதன் உள்ளத்திலே கிடந்து வெளிப்படப் போகும் அந்தப் பெருங் கொதிப்பிற்கு ஒரு பீடிகை போல.

'சுடு மயானத்திடை' என்று தொடங்கும் இப்பாட்டு, சுடுகின்ற தீயின் நாக்கைப் போலக் காண்கிறது. இது பரதன் உள்ளத்திலே 'புகைந்து கனன்று' பொங்கி வாக்கிலே வெளிப்படப் போகும் ஓர் பெருங் கனலுக்கு ஓர் அறிகுறி.

ஹிருதய அலறல்

சாந்த குண பூஷணமான பரதன்—நீதியின் நிலையமான பரதன்— தாயை, அன்னியனான குகனுக்கு எப்படி அறிமுகப்படுத்துகிறான்? தான் பிறந்த அந்த வயிற்றிலேயே துன்பமெல்லாம் பிறந்ததாம். தனக்கும் துன்பங்களுக்கும் பெற்ற தாயான கைகேயி உலகம் தூற்றும் பழிக்கெல்லாம் வளர்ப்புத் தாயாம். 'அந்த வயிற்றில் பத்து மாதம் கிடந்தேன்!' என்று அலறுகிறது பரத ஹிருதயம்.

இந்தப் பாட்டைப் பார்க்கலாம், அந்த ஹிருதய அலறலையும் அப்படியே கேட்கலாம்:

படர்எலாம் படைத்தாளைப்,
பழிவளர்க்கும் செவிலியைத்,தன்
பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம்
கிடந்தேற்கும் உயிர்ப்பாரம்
குறைந்து தேய,—

உடரெலாம் உயிரில்லா
எனத்தோன்றும் உலகத்தே
ஒருத்தி அன்றே
இடரிலா முகத்தாளை
அறிந்திலையேல், இந்நின்ருள்
என்னை ஈன்ருள்.

[படர் — துன்பம். செவிலி — வளர்ப்புத் தாய். பாழ்த்த பாவிக் குடரிலே — பாழான பாதகக் குடலிலே. குடரிலே - (இங்கே) வயிற்றிலே. நெடுங்காலம் - (இங்கே) பத்து மாதம். கிடந்தேற்கும் - கிடந்த எனக்கும். உயிர்ப் பாரம் - உயிரைத் தாங்கி நிற்கும் உடம்பு. குறைந்து - மெலிந்து. தேய - தேய்ந்து போகும்படி. உடர் எலாம் - எல்லாருடைய உடல்களும் (மேலே சொன்ன துன்பங்களின் காரணமாக, ராமனது பிரிவின் விளைவாக). உயிர் இல்லா எனத் தோன்றும் - உயிர் இல்லையோ என்று சொல்லத் தோன்றுகிற. இடர் இலா - துயரம் (சற்றும்) இல்லாத. அறிந்திலையேல் - நீ இன்னும் அறிந்து கொண்டிராவிட்டால். இந் நின்ருள் - இங்கு நிற்கின்றவள்.]

தாயைப் பழிக்கும் தரும நீதி!

ராமனைக் காட்டுக்கும் தசரதரைச் சுடுகாட்டுக்கும் அனுப்பி, எல்லாருக்கும் எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாகிவிட்டாள். ஆகவே, இவன் தான் துன்பங்களையெல்லாம் படைத்துவிட்ட தாய் என்கிருன் பரதன்.

தன் கொடுமையால் விளைந்த பழியைக் கொஞ்சமாவது குறைக்கவும் கைகேயி முயற்சி செய்ய வில்லையாம். மேலும் மேலும் பழியை வளர்த்துக் கொண்டிருக்கிருளாம். ஆகவே 'பழி வளர்க்கும் செவிலி'



என்கிறான். 'பழிக்குச் செவிலித்தாய், துயரத்திற்குப் பெற்ற தாய், எனக்கும் பெற்ற தாய்!' என்கிறான் பரதன்.

உலகத்திற்குத் துன்பம் கைகேயி வாயில் பிறந்தது. உலகத்தார் வாயில் பிறந்தது கைகேயிக்குப் பழிச் சொல். 'ராமன் காட்டுக்குப் போகவேண்டும்' என்ற அந்தக் கைகேயி நாக்கிலே பிறந்தது துன்பம். 'பாவி! இப்படியும் வரம் கேட்டாளே; ராமனையும் காட்டுக்குப் போகச் சொன்னாளே!' என்ற உலகத்தின் நீண்ட நாக்கிலே பிறந்தது கைகேயிக்குப் பழி. உலகததின் நாவிலே பிறந்த பழியைத் தன் நட்த்தையால் தடைப்பதற்கு மாறாக அதை வளர்த்து வந்தாளாம், குழந்தையைச் சீராட்டி வளர்ப்பது போல்.

'இக் கொடியாளுடைய கொடிய வயிற்றில் நெடுங்காலம் கிடந்த நானும் கொடியன்' என்கிறான் பரதன். 'தாயும் கொடியள், சேயும் கொடியன் — தாயைப் போலே பிள்ளை, நூலைப் போலே சேலை' என்பது குறிப்பு. அக் கொடிய வயிற்றில் நெடுங்காலம் கிடந்ததால் அவள் கொடுமையில் அழுந்திக் கிடந்து பிறந்த தனக்கே நெஞ்சு பொறுக்கவில்லையாம். பொறுக்க முடியாமல் உடல் மெலிந்து தேய்ந்து கொண்டிருக்கிறதாம்.

தன் நிலையே இப்படி யென்றால், மற்றவர்கள் எப்படிப் பொறுத்திருக்க முடியும்? 'அவர்கள் எப்படி இளைத்துத் துரும்பாகி இருப்பார்கள்?' என்பதைக் கொஞ்சம் குகனுடைய ஊகத்திற்கு விடுகிறான்.

துன்பம் நிறைந்த உயிர்களுக்கு உடல் ஒரு பெரும் பாரமாகவே தோன்றும்; ஆகவே 'உயிர்ப்பாரம்' என்று விசேஷமாகத் தன் உடம்பைப் பரதன் மனம் நொந்து குறிப்பிடுகிறான். மற்றவர்களுக்கோ துயரச் சுமை தன்னைக் காட்டிலும் அதிகமா யிருக்கும் என்பது குறிப்பு.

ராமனைப் பிரிந்த உலகம் உயிர் பிரிந்த உடல் போலத்தான் இருக்க முடியுமாம்: எல்லாருக்கும் பொதுவான ஒரே உயிரல்லவா ராமன்? 'உலகத்திலே இன்று உயிரில்லை; உடல்களெல்லாம் உயிரில்லாமல் தான் நடமாடுகின்றன!' என்கிறான் பரதன். 'மூச்சுவிடும் பிரேதங்களாகத்தான் மக்கள் காணப்படுகிறார்கள்; ராஜ்யத்திலே உத்ஸாகமில்லை, ஊக்கமில்லை, ஜீவகளை இல்லை — நாடெல்லாம் "சுடு மயான" மாகத் தான் இருக்கிறது!' என்பது குறிப்பு.

அததகைய உலகில் துயரம் இல்லாத முகத்துடன் காணப்படுகிறவள் கைகேயி ஒருத்தி தானே? 'மூஞ்சியைப் பார்த்தால் தெரியவில்லையா? தெரியா விட்டால் தெரிந்துகொள். இந்தப் பாக்கியவதி தானப்பா என்னைப் பெற்ற அம்மா!' என்று அலறிய மைந்தனின் நீதி யுள்ளத்தை என்னென்பது?

கோசலையையும் சுமித்திரையையும் இந்த இதயம் எவ்வளவு பூரிப்புடன் பாராட்டி அறிமுகப் படுத்தியது! அதே வாயால் தன் தாயின் கொடுமையை இவ்வளவு பச்சையாகவும் 'கொச்சை' யாகவும் பரதன் எடுத்துக் காட்டி விட்டான் குகனுக்கு.

ஆனால் குகன் என்ன செய்கிறான்? தோணியிலுள்ள மற்றவர்களுக்கும் தான் எவ்வளவு அசந்தர்ப்பமான நிலை இது! இந் நிலையிலிருந்து எல்லாரையும் விடுவிக்கும் கவிஞனது நாடகத் திறமையைத் தான் பார்க்க வேண்டாமா?

பி. ஸ்ரீ.

201. என்ன சீலம்! என்ன சம்பத்து!

அண்ணனைக் காட்டுக்கு அனுப்பித் தந்தையின் மரணத்திற்கும் காரணமாகிவிட்ட அந்த 'இரக்கமின்மை'யை மிகவும் கடுமையாக ('கொடுமையாக' என்று கூடச் சொல்லலாம்)க் கண்டித்தான் பரதன், அன்னை யென்று பாராமல். குகனோ அன்னை யென்று அவளையும் கை தொழுகிறான். இந்த நிலையில், கரைக்கு வந்து விடுகிறது தோணி — என்று அந்தக் கட்டத்தை — எவ்வளவோ கஷ்டமான சந்தர்ப்பத்தை — பளிச் சென்று நாடகத் திறமையுடன் முடித்து விடுகிறான் கவிஞன்:

என்னக் கேட்(டு),அவ்
இரக்கமி லாளையும்
தன்நற் கையின்
தொழுதனன் தாய்என,—
அன்னப் பேடை
சிறையில தாய்க்கரை
துன்னிற்(று) என்னவும்
வந்தது தோணியே.

[நற்கையின் - நல்ல கையினால். சிறை - சிறகு. இலதாய் - இல்லாததாய், துன்னிற்று - வந்து சேர்ந்தது.]

'அந்தத் தோணிதான் எவ்வளவு அழகாய்க் கரை வந்து சேருகிறது!' என்று காட்டுவது போல், நமது கவனத்தை எவ்வளவோ நிர்ப்பந்தமான ஒரு காட்சியிலிருந்து, அப்பால் திருப்பி விடுகிறான் கவிஞன். அன்னப் பறவை ஒன்று நீந்தி அக்கரை அடைவது போல் தோன்றுகிறதாம் வெண்ணிறமான தோணி கரை வந்து சேர்வது. ஆனால் 'இந்த அன்னத்திற்குச் சிறகில்லை!' என்று சுட்டிக் காட்டுகிறான். உருவிலும் போக்கிலும் அப்படியிருக்கிறது தோணி.

* * *

இனி நாம் அக்கரையிலுள்ள பரத்வாஜ முனிவரது ஆசிரமத்தை நோக்கிப் போக வேண்டும். மூன்று ராணிகளும் தனித் தனியாய்ப் பல்லக்



கில் செல்லுகிறார்கள். இப்போது கைகேயி போகும் பல்லக்கைப் போல் அவ்வளவு கவலைச் சுமையை — பச்சாத்தாபத்தை—ச் சுமந்து செல்லும் பல்லக்கு வேறொன்றும் இல்லை. மற்ற இரண்டு ராணிகளுக்கும் இல்லாத மனத் துயரமும் கைகேயிக்கு வந்து விட்டதென்று ஊகிக்கலாம். பரதனுக்குக்கூட இவ்வளவு துயரச் சுமை இல்லையென்று கருதலாம்.

வனமும் ஊற்றும்

பரதன் வழக்கம்போல் நடந்துதான் போகிறான், அந்தக் கரடுமுரடான காட்டுப் பாதையிலும். மரவுரி தரித்துப் பரதேசி போல் நீண்ட தூரம் கால் கடுக்க நடந்து போகும் பரதனுக்குத் தோணியில் இருக்கும் போதுதான் நடை இல்லை. அங்கும் 'தோணித் துடுப்பு' என்ற கால்களால் பரதன் நடந்தவண்ணமாகவே இருந்தான் என்று சொல்ல ஆசைப்



பட்டது கவிஞன் உள்ளம். துடிப்பு என்ற கால்களால் தோணி நடந்தது என்று கூடச் சொல்லாமல், நிலத்தில் கால் கடுக்க நடந்தது போல் நீர் மீதும் நெஞ்சு கடுக்க நடந்தானாம். கங்கை வெள்ளமும் பரதனுக்கு ஒரு பாழுங் காடாகவே தோன்றியது.

யானை, குதிரை, தேர், காலாள் என்ற நாற்படைகளும் பின்னே தொடர்ந்து வர, நடந்து சென்று கொண்டேயிருக்கும் அந்தத் தியாகமூர்த்தியின் உள்ளத்தை என்னென்பது? அந்த முகத்தினோடு அகத்தையும் பார்க்கிறோம். என்ன லட்சணம், என்ன ஏக்கம்! ஒளியிழந்து நீர்வறண்ட கண்கள்! உள்ளமும் வறண்டு அயர்ந்த ஒரு பாலைவனமாய்க் காண்கிறது. இதனால்தானே தாயையும் அப்படிப் பழிக்க நேர்ந்தது?

பாலைவனத்தில் திடீரென்று ஓர் ஊற்றுக்கண் திறக்கிறது. என்ன அதிசயம்! அது வரவரப் பொங்கிப் பெருகுகிறது. அதுதான் இன்னதென்று சொல்ல முடியாத ஓர் ஆசை—ஓர் அன்பு. ஏதோ ஒரு புண்ணிய பூமியை நெருங்குவது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. ஆம், ஒரு பெரியவரது ஆசிரமத்தைச் சமீபித்துக் கொண்டிருக்கிறான்.

அவர் செல்வம் பரத்திலே!

இதை அறிந்துகொண்டு பரதன் விரைந்துபோய் அவரைச் சந்திப்பதற்குள், அப்பெரியவரே இவனை எதிர்கொண்டு வருகிறார், தமது சிஷ்ய சம்பத்துடன். அவரது சம்பத்தைத்தான் என்னென்பது? நீண்ட சடைமுடியும் தாடியும், மரவுரியும் மான் தோலும் — இவைதானா இவர் செல்வம், இவர் வாழ்வு?



பரத்தின் ஓங்கு
    பரத்துவன் என்னும் அவ்
வரத்தன், மேதகு
    மாதவன், வைகிடம்,
அருத்தி கூர
    அணுகினன்; ஆண்(டு)அவன்
விருத்தி வேதிய-
    ரோ(டு)எதிர் மேயினான்.

[பரத்தின் ஓங்கு—மேலான வாழ்வில் ஓங்கிக் கொண்டிருக்கும். பரத்துவன் - பரத்வாஜன். அவ்வரத்தன் - பிரசித்தமான வரப்பிரசாதங்களை உடையவன். மேதகு மாதவன் — மேன்மை தங்கிய மகரிஷி. வைகு இடம் — ஆசிரமப் பிரதேசம். அருத்தி—ஆசை, அன்பு. கூர—மிகுதியாக. அணுகினன் — சமீபித்தான். ஆண்டு - அப்போது. விருத்தி வேதியர்— குருகுலத்தில் அறிவை விருத்தி செய்து

கொண்டிருக்கும் வேதியர்கள். எதிர்மேயினன்—எதிர்கொண்டு வந்தவன் தான்.]

இந்த இல்வாழ்வில், தோலாடையும் தாடி சடைகளுமாய் ஏழை போல் தோன்றினாலும், பரத்திலே—அதாவது உயர்தர ஞான வாழ்விலே—பரத்வாஜர் ஒரு பெருங் கோடீசுவரர் என்று சொல்ல வேண்டுமாம். தவம் முதலிய சாதனங்களால் அத்தகைய வரப்பிரசாதங்கள் பெற்றிருக்கிறார். (His Holiness the Pope என்று சொல்வது போல்) இம் மகரிஷியைக் கவி "மேதகு மாதவன்" என்று அறிமுகப் படுத்துகிறான்— பரதனுக்கும், நமக்கும் தான்.

உயர்வு எதில்?

இம் மகரிஷியின் சிஷ்ய சம்பத்தையும் "விருத்தி வேதியர்" என்று அறிமுகப்படுத்துவது கவனிக்கத்தக்கது. தானம் வாங்க வந்த வேதியரை "அருத்தி வேதியர்" (ஆசையோடு கூடிய வேதியர்) என்று சுந்தரகாண்டத்தில் சுட்டிக்காட்டும் கவிஞன், பரத்வாஜ ஆசிரமத்திலே குருகுல வாசம் செய்து அறிவுச் செல்வத்தை விருத்தி செய்து கொண்டிருக்கும் வேதியரை "விருத்தி வேதியர்" என்று குறிப்பிடுவது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது! இப்படி வேதியர்களை இரண்டு பிரிவுகளாய்ப் பிரித்துப் பேசுவதிலிருந்தே கம்பனுடைய லட்சிய உயர்வை உணர்ந்து கொள்ளலாம்.

நீதியால் வந்ததொரு
  நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு
  நெறி அறியா(த)

கவிஞன் அல்லவா? ஒழுக்கமும், எப்போதும் விருத்தி செய்யப்படும் அறிவுமே கம்பன் போற்றும் உயர்குலம் என்பது இக்காவியத்தை ஒரு வாறு பரிசீலனை செய்து பார்த்தவர்களும் நன்குணர்வர்.

திகைப்பு

இனி, தவ ஒழுக்கத்திற்கும் அறிவுச் செல்வத்திற்கும் விளை நிலம் போலிருக்கும் அந்த ஆசிரம எல்லையில் நடப்பதைத் தொடர்ந்து கவனிப்போம். சாந்தமயமாக விளங்கும் அக்காட்டுப் பகுதியில் மகாதேஜஸ்வியான அந்தத் தவசியை அப்படித் திடீரென்று கண்டதும், பரதன் பிரமித்துப் போகிறான். இறந்து போன தன் அருமைத் தந்தையே இப்போது வேறொரு நவ்விய ரூபத்தில் வருகிறாரோ?—என்று தோன்றுகிறது. உடனே வெகு விநயத்தோடும் பக்தி விசுவாசங்களோடும் பரதன் தரையில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறான்.

மகரிஷியும் பரதனுடைய தவ வேடத்தைக் கண்டு திகைத்துப் போகிறார். தன்னைப்போல் அவனும் மரவுரி தரித்துச் சடைமுடியுடன் காட்சியளிப்பானேன்? ராமன் காட்டுக்கு வந்து விட்டதும், பரதனாவது முடி சூடி மக்களின் துயரத்தை ஒருவாறு போக்க முயல்வான் என்று

தான் அம்முனிவரும் எதிர்பார்த்திருக்க வேண்டும். அவர் எவ்வளவு இரக்கத்தோடு இவனை ஆசீர்வதிக்கிறார்!

பிறகு பாரத்வாஜ முனிவர் பரதனுடைய 'துரதிர்ஷ்ட'த்தைக் குறித்து எப்படி வருந்துகிறார்:

'எடுத்த மாமுடி
    சூடி, நின் பால் இயைந்(து)
அடுத்த பேரர(சு)
    ஆண்டிலை; ஐய! நீ
முடித்த வார்சடை
    யோடு முனிவர் தா(சு)
உடுத்து நண்ணுதற்(கு)
    உற்றுள(து) யா(து)?' என்றான்.

[நின்பால் — உன்னிடம். இயைந்து — இசைந்து. அடுத்த பேரரசு — அடுத்துவந்த மகாராஜ்யம். வார் — நீண்ட. முனிவர் தாசு — முனிவர்களின் ஆடை; மரவுரி. நண்ணுதற்கு — வந்து சேர்வதற்கு. உற்றுளது — நேர்ந்த கஷ்டம் அல்லது துரதிர்ஷ்டம்.

"உன் தாயார் உனக்காக எடுத்து வைத்திருந்தாளே, அந்த அழகான பெரிய கிரீடத்தைச் சூடிக்கொள்ளும் பாக்கியம் உனக்குக் கிடைக்கவில்லையே: அப்பா, குழந்தாய்! கைக்கு எட்டியது இப்படி வாய்க்கு எட்டாமல் போயிற்றே!" என்று முனிவர் துக்கிக்கிறார். தானாக வந்த ஸ்ரீதேவியை வேண்டாமென்று தள்ளுவார் உண்டோ?

விஷ்ணு சக்ரம்

எம். எஸ். கோவிந்தராஜன்

தீபாவளி ஆன வுடனே 'விஷ்ணு சக்கரம்' என்று சொன்னால் எல்லா குழந்தைகளுக்கும் அந்தப் பெயருடைய ஒருவாணம் தான் முதலில் ஞாபகம் வரும். நான் சொல்லப் போகும் கதை நிஜ விஷ்ணு சக்கரத்தைப் பற்றி — அதாவது, மகாவிஷ்ணு கையில் வைத்துக்கொண்டு துஷ்டர்களை ஸம்ஹாரம் செய்தாரே, அந்தச் சக்கரம்.

வெகு காலத்துக்கு முன் ஓர் அரசன் இருந்தான். அவன் பெயர் வரகுமாரன். இந்த அரசனுக்கு ஓர் அழகிய பெண் உண்டு. அவள் பெயர் ராஜமோஹினி. இவளுடைய புத்திசாலித்தனத்தையும் அழகையும் கண்டு பக்கத்துத் தேசத்து அரசகுமாரன் அவளை மணக்க விரும்பினான். ஆனால், இரு தேசத்து அரசர்களுக்கும் ஏதோ மனஸ்தாபம் உண்டாகையால், ராஜகுமாரன் தந்தையும் ராஜமோஹினியின் தந்தையும் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கவில்லை.

ராஜகுமாரன் ஒரு மந்திரவாதியை அணுகி, "நான் ராஜகுமாரியை சந்தித்தாக வேண்டும்! இல்லாவிட்டால் என்னால் ஜீவித்திருக்க முடியாது. நீ உதவி செய்தால்தான் முடியும்" என்றான்.

மந்திரவாதியும் தன்னுடைய சக்தியினால் அரசகுமாரனுக்குப் பறக்கும் சக்தியை உண்டாக்கினான். அவன் உடனே பறந்து சென்று, ராஜகுமாரி உப்பரிகையில் உலாவிக் கொண்டிருக்கும்போது எதிரில் நின்றான். ராஜகுமாரி அவனைக் கண்டதும் ஆச்சரியமடைந்து, "நீர் யார்? இங்கே எப்படி வந்தீர்?" என்று வினவினாள்.

மந்திரவாதி சொல்லிக் கொடுத்தபடி ராஜகுமாரன், "நான்தான் மகாவிஷ்ணு! என்னிடம் எல்லாச் சக்திகளும இருக்கின்றன" என்று கூறினான்.



அரசகுமாரி ராஜகுமாரனை அன்புடன் அழைத்துத் தன் தகப்பனார் முன் கொண்டு நிறுத்தினாள். ராஜகுமாரன், அவனிடமும் ராஜமோஹினியிடம் சொன்னது போலவே சொல்லவே, அரசன் நம்பிவிட்டான். மரியாதைகள் பிரமாதமாகச் செய்தான். தனி அரண்மனை ஒன்றை ஏற்பாடு செய்து அங்கே இருக்கச் சொன்னான். தினம் மாலையில் ராஜமோஹினியும் அரசகுமாரனும் உப்பரிகையில் உலாவி வருவார்கள். அர

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

205. இரண்டு பரீட்சைகள்

"முடி தரிக்க வேண்டிய தலையிலே சடை திரித்து வனம் வந்த காரணம்தான் என்ன? பரதா! சக்கரவர்த்தியாக வீற்றிருக்கத் தகுதி இல்லையா உனக்கு?" என்று பரிதவித்து அனுதாபம் காட்டிய பரத்வாஜ முனிவருக்குப் பரதன் நன்றி தெரிவிக்கிறானா? அதற்கு மாறாக ஏன் இந்தக் கோபம்? "தவசிகளுக்குள் இமயம் அல்லவா?" என்பதையும் மறந்து பேசுகிறான்.

பரத கோபம்

முனிவரனுதாபம் பரதனுள்ளத்திலே ஆயிரம் தேள் ஏக காலத்தில் கொட்டுவது போல் இருக்கிறது. அந்தக் கடுப்பை எப்படிச் சகிப்பான்? "என்ன வார்த்தை சொன்னீர்? யாரைப் பார்த்துச் சொன்னீர்? என் தகுதிக்குப் பொருத்தமான வார்த்தை சொல்லவில்லையே!" என்று சீறுகிறான்.

மேலே பேச முடியாமல் சிறிது நேரம் ஸ்தம்பித்து நிற்கிறான். கோபத் தீ கொழுந்து விட்டு எரிகிறது. "ஓ ரிஷியே! உம்முடைய யோக்கியதைக்குத்தான் சரியா, நீர் சொன்ன வார்த்தை?" என்றுகூடப் பொருள்படுமாறு பேசி விடுகிறான்.

சீற்றத் தீயிலிருந்து தெறிக்கும் பொறிகள் போன்ற சொற்களைப் பாருங்கள் :

சினக்கொ டுந்திறல் —
சீற்றவெந் தீயினான்,
மனக்க டுப்பினன்,
மாதவத்(து) ஓங்கலை,
'எனக்(கு) அ டுந்த(து) இ —
யம்பிலை நீ!' என்றான்;
'உனக்(கு) அ டுத்ததும்
அன்(று) உர வோய்!' என.

[சினக் கொடுந்திறல் — கொடுமையான கோப வேகத்தோடு கூடிய. சீற்ற வெந்தீயினன் — சீற்றம் என்ற வெப்பமான தீயோடு கூடிய பரதன். மனக் கடுப்பினன் — (மனத்திலேயே தேள் கொட்டியதுபோன்ற) கடுப்பை உடையவன். மாதவத்து ஓங்கல் — மாதவம் புரியும் முனிவர்களுக்குள் இமயமலை போன்ற பரத்வாஜன். இயம்பிலை — சொல்லவில்லை. உரவோய் — புத்திசாலியே.]

"ஓ புத்திசாலியே! உனக்கு அடுத்ததும் அன்று" என்ற வார்த்தையில், "இவ்வளவுதானா இவருடைய புத்திசாலித்தனம்? இதற்கு இவ்வளவு நீளமான தாடியும் சடையும் வேண்டுமா?" என்று துடி துடிக்கும் தர்மாவேசத்தையே பார்த்து விடுகிறோம். "பரதனா இப்படிப் பேசுகிறான்?" என்று பிரமித்துப் போகிறோம்.

இதற்காகத்தான் கவிஞன், "சினக் கொடுந் திறல் சீற்ற வெந்தீ" என்ற அந்தக் கோபாவேசக் கொடிய வேகத்தையும், "மனக் கடுப்பினன்" என்று உள்ளத்திற்குள்ளே தேள் கொட்டியது போன்ற அந்தக் கடுப்பையும் முற்படக் காட்டிவிடுகிறான்.

முனிவர் பூரிப்பு

பரதனுக்குக் கோபம் பொங்க, மகிழ்ச்சி பொங்குகிறது முனிவர்களுக்கு — பரத்வாஜருக்கும் சீடர்களுக்கும். ஏன்? "பையன் பரீட்சையில் தேர்ந்து விட்டான்!" என்று பெற்றோருக்கு ஏற்படும் பெரு மகிழ்ச்சிதான்!

உரைத்த வாசகம்
　　கேட்டலும், உள்எழுந்(து)
இரைத்த காதல் —
　　இருந்தவத் தோர்க்கெலாம்,
குரைத்த மேனியொ(டு)
　　உள்ளம் குளிர்ந்ததால்,*
அரைத்த சாந்துகொண்(டு)
　　அப்பிய தென்னவே!

[இரைத்த - கோஷிக்கும். காதல் - (இங்கு) அன்பாகிய கடல். இருந்தவம் - பெரிய தவம். குரைத்த - பூரித்த. சாந்து — சந்தனம்.]


பரதனுடைய உள்ளத்தை உள்ளபடியே பார்த்து விட்டார்கள் முனிவர்கள். ஆயிரம் மாற்றுத் தங்கமாக உருகிக் கொண்டிருந்த உள்ளத்தை அந்தக் கோபத் தீக்கிடையே தகதகவென்று ஜொலிக்கக் கண்டார்கள். கண்டவர்களின் உள்ளம் குளிர்ந்து உடம்பு பூரித்து விட்டதாம். சந்தனத்தை அரைத்து உள்ளத்திலேயே அப்பிவிட்டது போல் அவ்வளவு குளிர்ச்சி முனிவர்களுக்கு.

தமிழ் நாட்டுக் கோடை வெயிலில் நெஞ்சு குளிரச் சந்தனம் பூசி இன்புறும் பழக்கம் எவ்வளவு ரஸிகத் தன்மையுடன் வெளிப்படுகிறது பாருங்கள்!

முனிவர்கள் பரதனை அன்போடு ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஆனால் பரத்வாஜர் உள்ளத்தில் மாத்திரம், பரதனுக்குத் தாம் வைத்த பரீட்சை போதாது என்ற எண்ணம். ஆனால் அவர் அதைச் சீடர்களிடத்திலும் பிரஸ்தாபிக்கவில்லை.

• சரி, பரதன் அதிதியல்லவா? அவனுக்கும், அவனுடைய சேனைக்கும் விருந்து செய்ய வேண்டுமென்று பாரத்வாஜர் நினைக்கிறார். அந்த நினைப்பின் சக்தியே சொர்க்கத்தை ஆகர்ஷிக்கிறது. போக உலகம் சகல போகப் பொருள்களோடும் அப்படியே பறந்து வந்து முனிவருடைய பர்ணசாலைக்குப் பக்கத்தில் அமர்ந்து விடுகிறது!

மோகனமான அந்த மாலை வேளையை — மகரிஷி தமது சங்கற்ப சக்தியையும் மந்திர வித்தையையும் காட்டுவதற்கு உபயோகித்துக்கொண்டார். ஆசிரமத்தைச் சேர்ந்த நந்தவனங்களின் வழியாக வீசும் மாலை இளந் தென்றல், தேவலோகத்தைச் சேர்ந்த கற்பகச் சோலைகளிலும்



உலாவி அங்குள்ள பூக்களின் அதிசயமான பரிமளங்களையும் தாங்கி வருகிறது :

நந்த நந்த
வனங்களின். நாள்மலர்க்
கந்தம் உந்திய
கற்பகக் காவில்நின்(று),
அந்தர் வந்தென
அந்திதன் கைதர,
மந்த மந்த
நடந்தது வாடையே.

[நந்த நந்தவனங்கள் — ஆனந்தமான நந்தவனங்கள். நாள் மலர் — அன்று மலர்ந்த பூக்கள். கந்தம் — பரிமளம். உந்திய - வீசிய. கா — சோலை. அந்தர் — குருடர். மந்த — மெள்ள.]

தென்றற்காற்று, குருடர் வருவதுபோல் மெள்ள மெள்ளத் தள்ளாடித் தள்ளாடி வருகிறது. குருடனைக் கையைப் பிடித்து, அழைத்து வருவதுபோல் அந்திமாலை கை கொடுத்துத் தென்றலை அழைத்து வருகிறதாம். தன் அருமை மகனை கையைப் பிடித்து அல்லது கோலைப் பிடித்து அழைத்து வந்தபோதிலும், குருடன் மெள்ள மெள்ள வருவது இயற்கை ; 'எங்கேயாவது குழியில் விழுந்து விடுவோமோ?' என்று ஜாக்கிரதையாக வருவது தற்காப்பு — நியமமாகிய இயற்கைச் சட்டம். அப்படியே, அந்திமாலை கையைப் பிடித்து அழைத்து வந்தாலும், மெள்ள மெள்ள நடந்து வருகிறதாம் பூந்தென்றல்.

இந்தப் பூந்தென்றலையும் வசீகரமான மாலை வேளையையும் துணையாகக் கொண்டு முனிவரது மந்திர சக்தி வேலை செய்கிறது. அந்திவானத்தின் அழகுகள் தெய்விக அழகுகளாய்ப் பரிணமிக்கின்றன. அந்தி வேளையில் இயற்கை காட்டும் இந்திர ஜாலங்கள், மகரிஷி காட்டும் மஹேந்திர ஜாலங்களுக்குப் பீடிகை யாகின்றன.

பல்லக்கு ஏறும் அரசர் முதல் பல்லக்கைச் சுமந்து சுமந்து தோள் வீங்கிய வேலைக்காரர் வரை எல்லாரும் தேவ போகத்தைச் சரிநிகர் சமானமாக அனுபவிக்கிறார்களாம். ஆனால், பரதன் எங்கே ?

இன்பத்தால் இழைக்கப் பெற்ற போக பூமியிலே, இந்தக் கற்பகச் சோலையிலே, அமிர்தம் போன்ற உணவுகளை வெறுத்துக் காடுகளில் ராமன் சாப்பிட்ட காய் கிழங்குகளை யல்லவா பரதன் விரும்புகிறான் ? விரும்பியவற்றை விரும்பிய வண்ணம் கொடுக்கும் கற்பக தருவும் இவனுக்கு அந்தக் காய் கிழங்குகளைக் கொடுத்து உதவுகிறது.

அவற்றை உண்டபின், பரதன் தேவலோகப் பஞ்சசயன மெத்தைகளை வெறுத்து வெறுந்தரையிலே படுத்துக் கொள்ள ஆசைப் படுகிறான். பொன்னுடாகிய போக பூமியில் புழுதிக்கு எங்கே போவது ? அதையும் கற்பகத்தின் வாயிலாகவே பெற்றுப் பொன்மேனி புழுதி படியக் கிடக்கும் பரதனைப் பார்த்து நாம் பிரமித்துப் போகிறோம்.

பரத்வாஜ மகரிஷியும் பிரமித்துப் போயிருக்கவேண்டும். தமது இரண்டாவது பரீட்சையிலும் இப்படித் தேர்ந்த இவ்வளவு 'மார்க்கு' வாங்கிவிடுவானென்று எதிர்பார்த்திருக்க முடியுமா?

ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

206. பரதன் போர்க்கோலம்!

பரதனையும் படைகளையும் பாரத்வாஜ பரீட்சைக்கும் விருந்துக்கும் விட்டு, நாம் முன் கூட்டியே சித்திரகூடம் போய் விடுவோம். அங்கே சீதை பர்ணசாலையில் இருக்கிறாள். ராமனும் லட்சுமணனும் பர்ணசாலைக்கு வெளியே இருக்கிறார்கள். ராமனுக்குச் சிறிது தூரத்திலே உட்கார்ந்து வடக்கு முகமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் லட்சுமணன். அவனுக்கு ராமன் இழந்த அந்த மகா ராஜ்யத்தின் நினைவுகள்—அந்த 'நகர் நீங்கிய' பழைய காட்சிகள்—தோன்றியிருக்கலாம், மனக்கண் முன். திடீரென்று அந்தத் திசையில் அது என்ன அப்படி? — கடல் சிறிது தூரத்திலே பொங்கி வருகிற மாதிரி? உடனே பரபரப்பாக அருகிலுள்ள குன்றில் ஏறி அதன் உச்சி மீது நின்று பார்த்தான்.

'மிதித்த'ம் கவிதை

புழுதி ஒரே படலமாக மேலெழுந்து வானத்தைப் போர்த்து விடுகிறது. ஏககாலத்தில் எத்தனை வகை முழக்கங்கள்! சேனைக்கடல் தான் அப்படிப் பொங்கி வருகிறதென்று தெரிந்து விசையோடு இறங்கிக் கீழே குதித்தான். கோபவெறியில் மிதித்தான் நிலத்தை, அப்படியும் இப்படியுமாக. ஓடினான் ஒரே ஓட்டமாக ராமனிடம்; செய்தி சொன்னான்:

குதித்தனன் பாரிடைக்
குவடு நீ(று)எழ
மிதித்தனன்; இராமனை
விரைவின் எய்தினான்;
'மதித்திலன் பரதன்நின்
மேல்வந் தான்,மதில்
பதிப்பெருஞ் சேனையின்
பரப்பி னான்' என்றான்.

[பாரிடை — நிலத்தில். குவடு நீறு எழ — (குதித்த) மேட்டில் தூசு கிளம்ப. மதில்பதி — மதிலை உடைய அயோத்தி. சேனையின் பாப்பின் — பார்த்த சேனையை உடைய பரதன்.]

அபூர்வமான — கம்பனுக்கே உரிய - கவியுருவம் கிடைத்துவிட்டது, லட்சுமணன் கோபவெறியுடன் நிலத்தை மிதித்த அந்தக் கால் மிதக்கு. அந்த ஓசையைப் படம் பிடித்து நம் காதில் போடுகிறது இந்த ஓசைச் சித்திரமாகிய பாட்டு.

மேலும் கீழும் குடியேற்றம்

உடனே அரையில் உடைவாள், காலில் வீரக்கழல் கட்டிக் கவசம் பூண்டு முதுகில் அம்பறாத் தூணி தாங்கி யுத்த சன்னத்தனாகி வில்லை எடுத்து டங்காரம் செய்துகொண்டே, அண்ணனை அடிதொட்டு வணங்குகிறான். வீர வெறியும் கோப வெறியும் கொண்ட அந்த மனக்கண்முன் இரத்த ஆறுகள் ஓடுகின்றன. பாணங்கள் அந்த மானஸ உலகிலே எட்டுத் திக்குகளிலும் நெருப்பைக் கக்கித் திரிகின்றன. கவசங்கள் மார்பகளோடு துளைபடுகின்றன. கையற்ற மனிதர்களோடு, காலற்ற யானைகள், தலையற்ற குதிரைகள், உருக்குலைந்த தேர்கள் ஒரே கதம்பமாகின்றன. எத்தனை குடல்களை இரத்த வெள்ளம் அலைத்துத் தள்ளுகிறது! எத்தனை வீரர்கள் இவ்வுலகிலிருந்து குடி நீங்கி வீர சொர்க்கத்தில் புதுக் குடியேறுகின்றனர்! அச் சொர்க்கம் முதுகு நெளிக்க, நில வுலகம் முதுகு ஆற்றி இளைப்பாறுகிறதாம்.

ஆனால் பரதனை மாத்திரம் இந்த வீர சொர்க்கத்திற்கு அனுப்ப உத்தேசம் இல்லை. அவன் மேல் லட்சுமணனுக்குத் தான் எவ்வளவு கருணை பாருங்கள்!

ஒருமகள் காதலின்
　　உலகை நோய்செய்த
பெருமகன் ஏவலின்
　　பரதன் தான்பெறும்
இருநிலம் ஆள்கைவிட்(டு),—
　　இன்(று)என் ஏவலால்
அருநர(கு) ஆள்வது
　　காண்டி, ஆழியாய்!

[ஒரு மகள் — ஒரு பெண்; (இங்கே) தனிப்பட்ட ஏகமான கைகேயி. பெருமகன் — மகான் தசரதன். இரு நிலம் — பெரு நிலம், மகா ராஜ்யம். அரு நரகு — சகித்தற்கு அரிய துன்பங்களோடு கூடிய நரகம். காண்டி — காண்பாய். ஆழி — ஆக்ஞா சக்கரம். ஆழியாய் — (இங்கே) இறைவனது ஆக்ஞா சக்கர முத்திரையுடன் துஷ்டர்களைத் தண்டிக்கும் அதிகாரம் பெற்று வந்திருக்கும் ராமனே.]
என்று ராமனை நோக்கிக் கூறுவதைப் பாருங்கள்.

"தசரதன் சொன்னபடி கேட்டவன், நான் சொல்லுகிறபடியும் போகப் போகிறான் பார்! அவன் அரசான ஏவினான்; நான் நரகாள ஏவுகிறேன்!" என்ற வார்த்தை அப்படியே லட்சுமண ஹிருதயத்தை "இதோ

பாருக்கள்" என்று நமக்குக் காட்டுகிறது. பரதனுடைய படைவீரர்களை வதஞ் செய்து மேலுலகம் சேர்க்கும் அம்புகள், துரோகியான பரதனை வதைத்துக் கீழுலகமாகிய நரகத்திலே தள்ளி அழுத்தி விடுமாம்.

அன்பின் அலறல்

அப்போது அந்த "ஒரு மகள்" — கைகயன் மகள், தசரதன் காதலி — என்ன செய்வாள் தெரியுமா? எந்தப் புத்திரனுக்காகக் கிரீடத்தைக் கவர்ந்துகொண்டாளோ அதே புத்திர சோகத்தால்,

கைகயன் மகள் விழுந்(து)
அலறக் காண்டியால்!

என்று கடுஞ்சீற்றத்தோடு வீரவாதஞ் செய்யும் இளையவனைப் பாருங்கள். லட்சுமண ஹிருதயத்தின் அலறல் இது. ராமனுக்கு அன்பே இழைத்துத் துன்பம் துடைத்துக் கொண்டிருக்கும் தங்க ஹிருதயமல்லவா இப்படி அலறுகிறது? — ராமனுக்குத் தெரியாததா?

எனினும் பரதனையா இப்படியெல்லாம் பேசுவது? "என் மேலுள்ள நேச மிகுதியால் இப்படி நினைக்கிறாய்!" என்று மெள்ளச் சமாதானம் சொல்லுகிறான் ராமன். லட்சுமணனே விரைவில் உண்மையைக் கண்டு கொள்வான் என்பது ராமன் கருத்து.

'அவலம்' என்ற சித்திரம்

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, பரதன் சேனையை நிறுத்திவிட்டுத் தம்பி சத்துருக்னன் தொடர ராமனை நோக்கி வரு



கிறான். அந்தக் கோலமும் சீலமும் இப்போது ராமனுக்கே எவ்வளவோ சங்கடமாயிருக்கின்றன.

தொழு(து)உயர் கையினன்,
துவண்ட மேனியன்,
அழு(து)அழி கண்ணினன்,
அவலம் ஈ(து)என
எழுதிய படிவம்ஒத்(து)
எய்து வான்தனை,
முழு(து)உணர் சிந்தையான்
முடிய நோக்கினன்.

[அவலம் - துன்பம், கவலை, தரித்திரம். ஈது - இது. படிவம் - ஓவிய வடிவம். முழுதுணர் சிந்தையான் - (பரதன் கருத்தையும் துயரத்தையும்) நன்றாய் உணர்ந்து கொண்ட ராமன். முடிய நோக்கினன் — நன்றாய் உற்றுப் பார்த்தான்.]

பரதனை அந்த நிலையில் படத்திலே எழுதி, அந்தப் படத்திற்குப் ‘பரதன்’ என்று பெயரிடாமல் ‘அவலம்’ என்றே பெயர் கொடுத்து விடலாம். அப்படி உலகத்திலுள்ள தரித்திரத்திலும் கவலைகளிலும் ஏற்படும் துயரமெல்லாம் ஒரே உருவமாய்ச் சித்திரிக்கப் பெற்றது போல வரும் பரதனை ராமனே பிரமித்து உற்று நோக்குகிறான்.

போர்ப் பெருங்கோலம்

அந்த உருவத்தை லட்சுமணனுக்குச் சுட்டிக்காட்டி, “ஆர்ப்பாட்டம் செய்யும் வில் வீரனே! அப்பா தம்பி! உன்னைத் தான் சொல்லுகிறேன், பார்” என்கிறான் ராமன்:

கார்ப்பொரு மேனிஅக்
கண்ணன் காட்டினன்:
‘ஆர்ப்புறு வரிசிலை
இளைய ஐய! நீ
தேர்ப்பெருந் தானையால்
பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப்
பொருந்த நோக்(கு)’ எனா.

[கார்ப்பொரு — நீலமேகம் போன்ற. ஆர்ப்புறு வரிசிலை — கோப வெறியால் ஆர்ப்பாட்டமாக டங்காரம் செய்யப்பட்ட கட்டமைந்த வில். தானை — சேனை. எனா — என்று.]

“தேர் முதலிய பெருஞ் சேனையோடு அதோ பரதன் நம்மேல் சீறி வரும் அந்தப் போர்ப் பெருங்கோலத்தைப் பார் அப்பா! நன்றாய்ப் பாரப்பா!” என்ற வார்த்தையில் தான், எவ்வளவு சோகமும் அன்பும் தோய்ந்த ஹாஸ்யம்! நம்முடைய உள்ளத்தையே எப்படியெல்லாம் உருக்கி விடுகிறது! லட்சுமண னுள்ளத்தையோ, இந்த வார்த்தையும் அங்கே தோன்றிய உருவமும் ரம்பம் போட்டு அறுக்கின்றன.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

207. என்ன தூது! என்ன செய்தி!

ராமன் பரதனைச் சுட்டிக் காட்டினான், அதற்கு முன்பே லட்சுமணனும் பார்த்து விட்டான். "என்ன அநியாயம் செய்து விட்டோம்!" என்று உள்ளம் கலங்கி விட்டது. முகத்தில் உள்ள அந்த வீர ஒளி மழுங்கி முகம் இருண்டு போயிற்று. சில நிமிஷங்களுக்கு முன் வசினனே, அந்த வசவு போன இடம் தெரியாமல் போய் விட்டது. ஆம், அந்த 'லட்சுமண கோபம்' இப்போது எங்கே? சொல், சினம், உணர்ச்சி எல்லாம் நழுவிக் கண்ணீராய்க் கரைந்து விழ, கையிலுள்ள வில்லும் நழுவி விழுந்து விட்டது. அப்படியே பிரமித்துத் திக்பிரமை பிடித்தவன் போல் நின்று விட்டான் லட்சுமணன், உள்ளும் புறமும் ஒருங்கே சோர்ந்தவனாய்.

பரதன் தூது

பரதன் தொழுது கொண்டே ராமன் முன் வருகிறான்.

கோ(து)அறத் தவம் செய்து
குறிப்பின் எய்திய
நாதனைப் பிரிந்தனள்,
நலத்தின் நீங்கினள்,
வேதனைத் திருமகள்
மெலிகின்றாள்,விடு
தூ(து) எனப், – பரதனும்
தொழுது தோன்றினான்.

[கோதுஅற - குற்றங்கள் நீங்க. குறிப்பின் - குறிப்புப்படி; தவப் பயனாக. எய்திய – அடைந்த. நலத்தின் நீங்கினள் - அழகெல்லாம் இழந்தவளாகி. வேதனைத் திருமகள் – வேதனைப் பட்டிருக்கும் ராஜ்ய லட்சுமி.]

மற்போர் முதலியன பயின்று பருத்திருந்த தோள்கள் எவ்வளவோ துயரத்தாலும் பட்டினியாலும் மெலிந்து ஒடுங்கியிருக்கின்றன. அந்த மெலிவிலேயே, ராமன் பிரிவால் பரதன் பட்டபாடும் நாடு பட்டபாடும் புலனாகின்றனவாம்.

எவ்வளவோ தவம் செய்துதான் தன் கருத்துக்கு இசைந்த நாதனை அடைந்தாளாம் ராஜ்யலட்சுமி. ஆனால் தவப்பயனாகக் கிடைத்த தலைவனை உடனே பிரிந்துவிட்டாள் தலைவி. ஏன்? கருத்துக்கு இசைந்தவன் கண்ணுக்கு எதிர்ப்பட்டான்; திருமணம்—அதாவது பட்டாபிஷேக விழா—நடக்கவேண்டிய நாழிகையிலேயே பிரிந்து விட்டான். காதலுக்கு எப்படி இருக்கும்? அழகெல்லாம் அழிந்து மெலிந்து போனாள்-ஒரே நரகவேதனை தான்! அப்படிப்பட்ட வேதனையில், மெலிவில், ராஜ்யலட்சுமி பிரிவாற்றாது தூதுவிட உத்தேசித்தாளாம். தலைவியின் வேதனை அவளைச் சார்ந்தவர்களுக்கும் ஏற்பட்டுவிட்டது. ராஜ்யலட்சுமியும் அவளுக்கு வேண்டிய எல்லோரும் — தூதன் உள்ளிட்ட எல்லோரும்தான் — மெலிந்து போய்விட்டார்கள்.

மெலிந்துபோன காதலி, தூது விடும்போதும் மெலிந்த தூதனைப் பொறுக்கி யெடுத்து அனுப்பிவைத்தாள் நாதனிடம்—என்று சொல்வது எவ்வளவு ரஸமாய் இருக்கிறது! தூதன் தோற்றமே தன் அநாத நிலையைப் பிரதிபலிக்கும்படி, தூது அனுப்பியிருக்கிறாளாம். பரதனுடைய மெலிவும், மனவேதனையைப் பிரதிபலிக்கும் முகத்தோற்றமும், இப்படியெல்லாம் கவிஞனைப் பாடவைத்து, நம் உள்ளத்திலும் பிரதிபலிக்கின்றன.

என்ன மறதி!

பரதன் ராமனைக் கண்டு என்ன சொல்ல எண்ணினான்? எப்படிச் சொன்னான்? பாருங்கள்:

'அறந்தனை நினைந்திலை,
அருளை நீத்தனை,
துறந்தனை முறைமையை!'
என்னும் சொல்லினன்,
மறந்தனன், மலரடி
வந்து வீழ்ந்தனன்,—
இறந்தனன் தாதையை
எதிர்கண் டென்னவே!

[தாதை — தந்தை. எதிர்கண்டென்னவே — எதிரே கண்டது போலவே. இறந்தனன் தாதையை – இறந்துபோன தந்தையை.]

'ராமனைக் கண்டதும் என்ன சொல்ல வேண்டும்?' என்பதை நினைத்துப் பார்த்து உருவேற்றிக் கொண்டு வருகிறான் பரதன். "என்ன அண்ணா! இப்படி அநியாயம் செய்யலாமா? தருமத்தை நீயும் நினைத்தாயில்லையே! அருளையும் கைவிட்டாயே!" என்றெல்லாம் அண்ணனிடம் சொல்லித் தன் இதய வேதனையைக் கொட்டிவிடவேண்டும் என்று தான்

வருகிறான். ஆனால் 'அறம்தனை நினைந்திலை, அருளை நீத்தனை, துறந்தனை முறைமையை!' என்று சொல்லிக் கொண்டே வந்தவன், ராமனைக் கண்டதும் அப்படியெல்லாம் சொல்ல மறந்து காலில் விழுந்து விடுகிறான்.

ஏன் இப்படி மறந்து போகிறான்? ராமனைக் கண்டதும் அண்ணனைக் கண்டது போலவா இருக்கிறது? இறந்துபோன அப்பனைக் கண்டது போலிருந்ததாம். அவ்வளவு அன்பு, அவ்வளவு துயரம். உணர்ச்சி மேலிட்டினால் காலில் விழுந்ததும் மெய்ம்மறந்து கிடந்தான்.

நியாயம் தருமத்தைத் தழுவிக் கொண்டது

'உயிர் இருக்கிறதோ, இல்லையோ?' என்னும்படி ஒடுங்கிக் கிடக்கிறான் பரதன், ராமன் மலரடிகளில். அண்ணன் தம்பியை உற்றுப் பார்த்த உள்ளம் உருகிக் கண்ணீர் வடிக்கிறான். கண்ணீர் வடித்த வண்ணம் பரதனை வாரியெடுத்து மார்போடு அணைத்துக் கொள்கிறான்.

அயா உயிர்த்(து) அழுகணீர்
அருவி மார்பிடை
உயா உறத், திருவுளம்
உருகப் புல்லினான்,—
நியாயம் அத்தனைக்கும் ஓர்
நிலயம் ஆயினான்,
தயா முதல் அறத்தினைத்
தழுவி என்னவே!

[அயா உயிர்த்து - அயர்ந்து பெருமூச்சுவிட்டு. உயாஉற -



வந்து சோர்ந்து நிற்க. புல்லினன் - தழுவிக் கொண்டான். தயாமுதல் அறம்-அருளை வேராக்வுடைய தருமம்.]

ராமன் தழுவிக் கொண்டதும் பரதனும் உணர்ச்சி பெற்று ராமனைத் தழுவிக் கொள்கிறான். நியாயம் தருமத்தைத் தழுவிக் கொள்வது போல் இருக்கிறது, இந்தச் சகோதரர்களின் ஆலிங்கனம். பரதன் நீதியின் நிலயம்; ராமன் தர்மத்தின் நிலயம். பரதகுணநிசயத்தில் விசேஷ அருங்குணம் நீதி; ராமகுணநிசயத்தில் விசேஷ அருங்குணம் தர்மம் என்பது குறிப்பு.

தந்தை காலமான செய்தி

பரதனைத் தழுவிக்கொண்டே ராமன் அவனது தவக்கோலத்தைப் பார்த்துப் பார்த்து என்ன என்னவோ எண்ணுகிறான். பிறகு மெள்ள, "ஐயோ, எப்படித் துயருற்று வாடிப்போனாய்! அப்பா சௌக்கியம் தானே?" என்று ஆசையோடு கேட்கிறான் ராமன். பரதன் பதில்:

அரியவன் உரைசெயப்
　　பரதன், 'ஐய! நின்
பிரிவெனும் பிணியினால்,
　　என்னைப் பெற்ற அக்
கரியவள் வரம்எனும்
　　காலனால், தனக்(கு)
உரியமெய் நிறுவிப்போய்
　　உம்பரான்' என்றான்.

[அரியவன் — அருமையான உள்ளம் படைத்த ராமன். கரியவள் — இங்கே கைகேயி. மெய் நிறுவி — சத்தியத்தை நிலைநிறுத்தி. உம்பரான் — வானுலக வாசியாகிவிட்டான்.]

'தந்தை இறந்ததற்குக் காரணம் வேறு பிணியில்லை, உன் பிரிவு என்ற பிணி தான்' என்கிறான். 'நோய் வந்தாலும், காலன் வந்துதானே உயிரைக் கொண்டு போகிறான்! அந்தக் காலனாக ஏற்பட்டது என்னைப் பெற்றவளின் வரம்' என்கிறான்.

தசரதனோ, சத்தியம் ஒன்றே தனக்கு உரிய பொருள் என்று நினைத்து அதை உலகத்தில் நிலை பெறச் செய்துவிட்டு வானுலகம் போய் விட்டானாம்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

208. மூன்று துயர்க் கடல்

பரதன் கைகேயியைத் தன் தாய் என்று சொல்லவும் கூசுகிறான். 'என்னைப் பெற்ற அக்கரியவள்' என்கிறான். 'கரியவள்' என்ற சொல்லில் 'அம்மான் தொட்டதெல்லாம் கரிதான்!' என்பது குறிப்பு. இக்கரியவள் வரமே தந்தைக்குக் காலனாயிற்று. ஆனால் உயிரைக் கொண்டு போக யமனுக்கும் ஒரு பிணி உதவ வேண்டும் அல்லவா? ராமன் பிரிவு தான் பிணி.

அவியா விளக்கும் அவிந்தது!

இவ்விதம் உயிரைக் கொடுத்துத் தமது சத்தியத்தை நிலைநிறுத்திப்போன அருமைத் தந்தையார் இப்போது பரலோக வாசியாய் இருக்கிறார் என்று பரதன் கூறியதும் ராமனுக்குக் கண்ணும் மனமும் சுழல்கின்றன, காற்றாடி போலே. உணர்வு நீங்கிப் பூமியில் விழுந்து விடுகிறான். பிறகு கொஞ்சம் உணர்ச்சி பிறக்கவும் பெருமூச்சு விட்டு மனம் பொருமிப் புலம்புகிறான் :

'நந்தா விளக்கனைய
நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனியறத்தின்
தாயே! தயாநிலையே!
எந்தாய்! இகல்வேந்தர்
ஏறே! இறந்தனையே—
அந்தோ! இனிவாய்மைக்(கு)
ஆருளரே மற்(று)' என்றான்.

[நந்தா விளக்கு — அவியாத விளக்கு. அனைய — போன்ற. நானிலத்தோர் தந்தாய் — இராஜ்யக் குடிகளுக்குத் தந்தையே. தனி அறத்தின் — ஒப்பற்ற தர்மத்தின். எந்தாய் — என் தந்தையே. இகல வேந்தர் ஏறே — போரில் வல்ல அரசர்களில் ஆண்சிங்கம் போன்ற வீரனே. வாய்மை — சத்தியம்.]

'அவியா விளக்கும் அவிந்து போயிற்றே!' என்ற இந்தச் சோகப் பாடலைப் பாடிப் பாடிப் பாருங்கள். வாசகர் உள்ளத்தையும் கழுவிப் புனிதமாக்குகிறது ராமனது சோகக் கண்ணீர்.

'நான் தந்தையை இழந்தது போல் இராஜ்யம் முழுவதும் தந்தையை இழந்து விட்டதே!' என்று ஒரு கணம் தனக்காகவும் நாட்டுக்காகவும் வருந்துவான். 'தருமம் தாயை இழந்து விட்டது; தயை தன் நிலைடத்தை இழந்தது!' என்று ஒரு சமயம் புலம்புவான். 'ஐயோ! சத்தியத்திற்குக் கதியாக இனி யார் இருக்கிறார்?' என்று பரிதவிப்பான்.

'கான் அடைந்தேன் நான்; நீ அதற்காக வான் அடைந்தாயே!' என்று பிரலாபிக்கும் ராமனை இதோ பாருங்கள்; அந்தக் குரலையே கேட்டு விடுங்கள்:

தேன்அடைந்த சோலைத்
திருநாடு கைவிட்டுக்
கான்அடைந்தேன் என்னத்
தரியாது, காவல! நீ
வான்அடைந்தாய்; இன்னம்
இருந்தேன்நான் வாழ்வுகந்தே!

[கான் — காடு. தரியாது — சகிக்க முடியாமல். காவல — அரசே! உகந்தே — விரும்பியே, ஆசைப்பட்டே.]

இப்படியெல்லாம் புலம்பித் துன்பக் கடலில் முழுகும் ராமனைக் குலகுருவான வசிஷ்டர் தேற்றுகிறார்.

ஒரு புதிய துயர்க் கடல்

பிறகு ராமனும் பரதனும் முனிவர்கள், மந்திரிகள் சூழச் சென்று சீதையிருந்த பர்ணசாலையை அடைகிறார்கள். அந்தத் தழைக்குடிசையில் பரதன் சீதையைப் பார்க்கிறான். அப் பார்வையும், அதனால் அவன் அடையும் கொடுந்துன்பமும் எப்படிச் சித்திரிக்கப்படுகின்றன, பாருங்கள்.


எய்திய வேலையில்
தமியள் எய்திய
தையலை நோக்கினன்,
சாலை நோக்கினன்,
கைகளில் கண்மலர்
புடைத்துக், கால்மிசை
ஐயன்அப் பரதன் வீழ்ந்(து)
அரற்றி னான்அரோ.

[எய்திய வேலையில்— ராமன் பரதன் முதலானவர்கள், பர்ணசாலையை அடைந்த சமயத்தில். தமியள் எய்திய-தன்னைத் தனியளாய் (சேடி முதலானவர்கள் இல்லாமல் குடிசையிலிருந்து). எதிர் வந்த. தையலை-சீதையை. சாலை- பர்ணசாலை. புடைத்து-மோதிக் கொண்டு. கால்மிசை-காலில். ஐயன்- (இங்கே) மகான். அரற்றினான் - கதறினான்.]

இந்த நிமிஷம் வரை, பரதனுக்கு ராமன் கஷ்டமே பெரிதாகத் தோன்றியது. சீதையைப் பற்றிய நினைவே இல்லை. இப்பொழுது சீதை பர்ணசாலைக்குள்ளிருந்து எதிரே வருகிறாள். பரதன் பார்க்கிறான், அவள் தன்னந் தனியாக வருவதை. 'அயோத்தியில் எத்தனையோ வேலைக்காரிகளும் தோழிகளும் சூழ்ந்து பணிவிடை புரிந்து கொண்டிருப்பார்களே!' என்ற ஞாபகம் வருகிறது.

மேலும் அவளை ராணியாகவா பார்க்கிறான்? ஆண்டிச்சியாகி விட்ட சீதையை அல்லவா பார்க்கிறான்? சுற்றிக். கொண்டிருக்கும் மரவுரி, அவள் அணிந்திருந்த விலை மதித்தற்கு அரிய சித்திரப் பொற் பட்டாடைகளையும், அபூர்வமான இரத்தின நகைகளையும் ஞாபகப் படுத்துகிறது. மகாராணியாகச் சிங்காதனத்தில் கொலுவீற்றிருக்க வேண்டியவள், எப்படி யாகி விட்டாள்! 'காரணம் நான் தானே!'

பரதன் சீதையையும் நோக்கி, அவள் வசிக்கும் குடிசையையும் நோக்குகிறான். ஆ, ஆ, அந்தக் குடிசை, சகபோக நிலயமான பழைய அரண்மனையை எப்படி நினைப்பூட்டுகிறது!



'இவளை இக் கதிக்குக் கொணர்ந்த கொடும்பாவியாகிய நான் இந்த நிலையில் இவளைப் பார்க்கவும் வந்து விட்டேனே!' என்ற எண்ணம் பளிச்சென்று உண்டாகிறது. உடனே அவன் தன் கண்களைக் கைகளால் அறைந்துகொண்டு அவள் காலில் விழுந்து அலறுகிறான். அந்த அலறலையே நம்முடைய காதில் விழச் செய்து விடுகிறது இப் பாட்டு.



சாதாரணமாய் ஓர் அசைச் சொல்லாக வரும் 'அரோ' பரதனது அழுகைக் குரலை அப்படியே நமது செவியில் கொண்டு வந்து போடும் மந்திரமாக மாறிவிடுகிறது இப் பாட்டிலே. அலைகடல் அலறும் ஓசையை நிசப்தமான நடு நிசியில் கேட்பதுபோல் கேட்கிறோம், பரதனது சித்தக் கடலின் அலறலையும்!

இந் நிலையில் 'மகானுன பரதன்' என்று பொருள் படும்படி 'ஐயன் அப்பரதன்' என்று கூறுவதும், அந்த நிரபராதியின கண்களைக் 'கண் மலர்' என்று குறிப்பிடுவதும் மகா கவிகளுக்குரிய மந்திர வித்தையாகும்.

சீதையின் முதல் துயரம்

இவ்விதமாகச் சீதையைக் கண்டு கொடுந்துயரம் அடைந்த பரதனை, ராமன் தன் கைகளால் தூக்கி நிறுத்துகிறுன். பிறகு சீதையை நோக்கித் தந்தை இறந்துபோன செய்தியை,

என்நெடும் பிரிவினில்
இறந்திட் டான்

என்று தெரிவிக்கிறுன்.

முடி துறந்து நாடு துறந்து காடு புகுந்த போதும், சீதை துன்பம் இன்னதென்று அறிந்து கொள்ளவில்லையாம். ராமனுடன் சென்றதால்,

நன்னகர் ஒத்தது
நடந்த கானமும்!

[நன்னகர் — அழகிய அயோத்திமா நகரம்.]

ஆனல் இப்போது துன்பத்தை அறியத் தொடங்கிவிட்டாள்:

மன்னவன் துஞ்சினன்
என்ற மாற்றத்தால்,
அன்னமும் துயர்க்கடல்
அடிவைத் தாள்அரோ.

[மன்னவன் — தசரதன். துஞ்சினன் — இறந்து போனுன். மாற்றத்தால் — வார்த்தையால். அன்னம் — சீதை.]

அந்தத் துயரச் செய்தியைக் கேட்டதும சீதை நடுங்கிப் போனுள். கண்ணீர் பெருக அப்படியே நிலத்தில் விழுந்தாள்; விழுந்தவள் அப்படியே கையை ஊன்றிக் கொண்டாளாம்.

மண்எனும் செவிலிமேல்
வைத்த கையினள்,
பண்எனும கிளவியால்
பன்னி ஏங்கினுள்.

[மண்எனும் செவிலிமேல் — தன்னை வளர்த்த செவிலித்தாய் என்று சொல்லத் தக்க பூமியின் மேல். பண்எனும் — சங்கீதமே என்று சொல்லத் தக்க அவ்வளவு இனிமையான. கிளவியால — (துயர) வார்த்தைகளால். பன்னி — புலம்பி.]

• • • •

பிறகு சமந்திரன் தாய்மாரோடும் முனிவர்களோடும் ராமனிடம் வருகிறுன்.

ராமாயணம்

பி. ஸ்ரீ.

209. இரண்டு கிரீடங்களின் அரசு

சுமந்திரனோடு ராமனை நோக்கி வந்த தாய்மார்களில் கைகேயியும் ஒருத்தி யென்பது கவனிக்கத் தக்கது. ராமன் அவர்கள் அடிகளில் விழுந்து, 'என் தந்தை எங்கே இருக்கிறார்? சொல்லுங்கள்' என்று இரத்தக் கண்ணீர் வடித்தான். அவர்களும் ராமனைத் தழுவிக்கொண்டு புலம்பினார்கள். பிறகு அவர்கள் சீதையைக் கட்டி அணைத்தவர்களாய்த் துன்பத்தில் அழுந்திப்போனார்கள். இப்போது கைகேயியின் மனமும் மாறி விட்டதென்று ஊகிக்கலா மல்லவா?

தாய்மார் அகன்றதும், சேனைவீரர், ஜனப் பிரதிநிதிகள், சிற்றரசர்கள் எல்லோருமாக ராமனை நோக்கி வந்தார்கள். இரவு கழிந்ததும் மறுநாள் காரியப்பேச்சு நடக்கிறது.

வேண்டாத நோன்பு?

முனிவர்களும் அரசர்களும் தன்னைச் சூழ்ந்திருக்க, ராமன் பரதனை நோக்கி, 'நீ முடி சூடாமல் தவ வேடம் பூண்டது யாது காரணத்தாலோ? தந்தையோ காலம் சென்றார். அவருடைய ஆணையால் அரசு உன் பொறுப்பில் இருக்கிறதே' என்று அன்போடு கேட்டு விட்டான்.

'வேண்டாத நோன்பும் வேடமும் எதற்காக?' என்று பரிவுடன் கேட்ட அண்ணனை நோக்கிப் பரதன் பதைத்தெழுந்தான். கை கூப்பி நின்று ஒன்றும் பேசாமலே அண்ணனை நெடும்பொழுது நோக்கினான். பிறகு, 'தருமத்தில் உறுதியாய் நிற்பவர் உன்னையன்றி யார் இருக்கிறார்? அதை விட்டு நீ இப்போது விலகி நிற்கலாமா?' என்று மெள்ளக் கேட்டான்.

ராமன் தந்தையும், தீவினையின் தாயும்

அப்பால், 'தந்தையாலும் தாயாலும் நேர்ந்த தீமையெல்லாம் தீர்ந்து போக வேண்டாமா?' என்று கேட்கிறான்:

'உந்தை தீமையும்
உலகு ருதநோய்
தந்த தீவினைத்
தாய்செய் தீமையும்,
எந்தை! தீர,மீண்(டு)
அரசு செய்'கெனச்
சிந்தை யாவதும்
தெரியக் கூறினன்.

[உந்தை — உன் தந்தை. உலகு உருத நோய் — உலகத்திற்கு இறவாமை ஏற்படாத துன்பம். தீவினைத் தாய் — தீவினைக்குப் பெற்ற தாய் போன்ற கைகேயி. எந்தை — என் அப்பனே, ராமனே.]

வாதம் முற்றுப் பெற்றது

பரதன், தந்தையை ராமனுக்கே தந்தை யென்றும், தன் தாயைத் தீவினைக்குத் 'தாய்' என்றும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

ராமனோ பரதன் கொள்கையைத் தவறென்று காட்டி, 'தந்தை சொல்லால் அரசு உன்னுடையதே; நீ ஆளத்தான் வேண்டும்' என்று வற்புறுத்திப் பார்த்தான். அதற்குத் தம்பி, 'அண்ணா! அரசு என்னுடையதானால் அதை நான் இப்பொழுதே உனக்குத் தந்தேன்' என்று பதில் சொன்னான். 'ஆனால், தந்தையானவர் தாய்க்கு வரம் கொடுத்தபடி நான் பதினாலு வருஷம் வனவாசம் செய்து தீர வேண்டுமல்லவா?' என்று ராமன் ஞாபகப்படுத்தினான். இப்படி வாதத்திற்கு மேல் வாதம், யுக்திக்கு மேல் யுக்தியாக ராம - பரத ஸம்வாதம் நடைபெற்றது.


வசிஷ்ட முனிவரும் பரதன் கட்சியை ஆதரித்து, 'என் ஆணையால் நீ இராஜ்யத்தை அங்கீகரிக்க வேண்டும்' என்று சொல்லிப் பார்த்தார். ராமனுடைய வாதம், சாஸ்திர நிபுணரான வசிஷ்டரது நுண்ணறிவையும் மௌனமாக்கி விட்டது.

'அப்படியானால் நானும் உன்னுடன் காட்டுக்கு வருவேன்' என்று பரதன் பிடிவாதம் செய்தான். அதற்கு ராமன், 'நான் வனவாசம் செய்யும்போது இராஜ்யம் பாழாய் விடாமல் நீ அரசு புரிய வேண்டியது தான்' என்று வற்புறுத்தி விடுகிறான்.

பிரதிக்ஞை

முடிவில், தாய் தந்தையர் வாக்கை ராமன் பரிபாலிப்பதுபோல், பரதனும் தமையன் வாக்கைப் பரிபாலிக்க இசைகிறான், வேறு வழி காணாதவனாய். ஆனால் அவன் இப்போது செய்யும் பயங்கரமான பிரதிக்ஞையைக் கேளுங்கள் :

ஆமெனில் ஏழிரண்(டு)
ஆண்டின், ஐய! நீ,
நாமநீர் நெடுநகர்
நண்ணி, நானிலம்
கோமுறை புரிகிலை
என்னில், — கூர்எரிச்
சாம்அது சரதம் : நின்
ஆணை சாற்றினேன்.



[ராமநீர் நெடுநகர்—நீர்வளம் பொருந்திய அயோத்திமா நகரம். ஞாலம் — (இங்கே) இராஜ்யம். கோமுறை — அரசாட்சி. புரிகிலை என்னில் — செய்யவில்லை யென்றால். கூர்எரிச் சாம் அது சாதம்—பெரிய நெருப்பு வளர்த்து அதிலே நான் விழுந்து சாவது சத்தியம்.]

குறித்த காலம் கழித்துச் சிறிது தாமதித்தாலும் நெருப்பிலே குதித்துச் சாவது சத்தியம் என்று தன் மேல் ஆணையிட்டுக் கூறும் பரதனை ராமன் பார்த்தான். அந்தத் துணிவு ராமனுள்ளத்தை உருக்கி விட்டது. அந்தப் பிரதிக்ஞைக்குப் பின் பரதனுடைய துன்பம் நீங்கி விட்டதாம்.

பிறகு பிரியவேண்டிய சமயம் வந்து விடுகிறது. துன்பம் மீண்டும் பொங்குகிறது. 'பதினாலு வருஷம் கழித்து வருவதாகச் சொல்லுகிறான் அண்ணன் — அப்படியா? பதினாலு வருஷமா?' என்று ஏங்கியதும் தாங்க முடியாத துயரம் வந்து விட்டது.

பாதரட்சையா, கிரீடமா?

பரதன் விம்மி ஏங்கிக்கொண்டே, ராமனது பாதுகைகளை இரந்து வேண்டுகிறான். அவை கிடைத்ததும், 'பாதுகைகள் கிடைத்து விட்

டன' என்று நினைக்கிறான்? 'இப்போது எனக்கு இரண்டு கிரீடங்கள் கிடைத்து விட்டன!' என்று பரதன் ராமனைத் தொழுது மீளும் காட்சியைப் பாருங்கள்:

அடித்தலம் இரண்டையும்,
அழுத கண்ணினான்:
முடித்தலம் இவைஎன
முறையில் சூடினான்,
படித்தலத்(து) இறைஞ்சினன்,
பரதன் போயினான்,
பொடித்தலம் இலங்குறு
பொலங்கொள் மேனியான்.

[அடித்தலம் — பாதுகை. முடித்தலம் — கிரீடம். முறையில் சூடினான் — நன்றாய் அமையுமாறு கட்டிக் கொண்டான். படித்தலத்து — தரையில். இறைஞ்சினன்-விழுந்து வணங்கி விட்டு. பொடித்தலம்-நிலத்தின் புழுதி. இலங்குற-விளங்குகிற. பொலங்கொள்-அழகு கொண்ட.]

பரதன், பாதுகைகளைத் தலையில் ஏந்திக் கொண்டு போகும் அந்தக் காட்சியைக் கவிஞன் எவ்வளவு பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறான்! 'அதோ போகிறானே அந்தப் பரதன் மேனியும், அம்மேனியில் படிந்துள்ள தூசியும்கூட எவ்வளவ் அழகாய் விளங்குகின்றன!' என்று நமக்கும் காட்டுகிறான். அந்த உள்ளொளி தூண்டிய இதயப் பிரகாசத்திலே அந்த நீதி போகும் அழகை நாமும் அப்படியே பார்க்கிறோம்.

* * * *

'இனி நாம் இங்கே யிருந்தால், அயோத்தியி லுள்ளவர்கள் அடிக்கடி வந்து தொந்தரவு செய்யக்கூடும்' என்று ராமன் தம்பியுடனும் சீதையுடனும் தென் திசை நோக்கிப் புறப்படுகிறான்.

பரதனோ இராஜதானியில் பிரவேசியாதவனாய், அருகிலுள்ள நந்திக் கிராமத்தில், 'ராமன் பாதுகை செங்கோல் செலுத்துகிறது!' என்று சொல்லும்படி, அந்தப் பாதுகைகளின் பிரதிநிதியாக இருந்து சுகபோகங்களைத் துறந்து இராஜ்யபாரம் தாங்குகிறான்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

210. கடலும், காடும்

ஒரு பெருங் கடல். அலைகள் நிமிர்கின்றன, நுரைக்கின்றன, மோதுகின்றன, சுருட்டி யடிக்கின்றன, உடைகின்றன, மறிந்தும் முறிந்தும் விழுகின்றன, மறைகின்றன. இவற்றுக்கிடையே கிடக்கிறோம், மிதக்கிறோம், மொத்துண்டு கிடக்கிறோம்; எனினும் கடல் கண்டோமில்லை!

என்ன கடல்?

அலைமேல் அலையெறிந்த வண்ணமாயிருக்கிறது. பேரலைகளும் சிற்றலைகளும், நுரைகளும் நுரைக் கொழுந்துகளும், நீர்க் குமிழிகளும் சுழிகளும் — இவற்றில் எல்லாம் எத்தனை விதம் விதமான உருவங்கள், அழகுகள்! தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, பறவை, மிருகம், மக்கள், தேவர் ஆகிய சராசர உருவங்களெல்லாம், இக்கடலின் அலைகள் முதலியன. பேதம் இல்லாத கடல், நிமிர்ந்து எழுந்து விழுந்ததும், எத்தனையோ பேத உருவங்கள் - பல்வேறு சராசர வடிவங்கள் — எழுகின்றன, நிலவுகின்றன, விழுகின்றன! நமது நெஞ்சின் அலைகளும் — எண்ணங்கள், விருப்பங்கள், உணர்ச்சிகள் எல்லாம் — இந்த நீலக்கடலில் நிமிரும் அலைகளே!

மண்ணுலகத்தைக் காத்துக் கிடக்கும் உவர்க்கடல் போல், இக் கடல் மண்ணையும் விண்ணையும் ஒருங்கே காத்துக் கிடக்கிறது; உலகங்களை யெல்லாம் கோத்துக் கிடக்கிறது, ஒரு கோவையாக. பல்வேறு பொருள்களிலும் உயிர்களிலும் கலந்திருந்து, இவற்றை யெல்லாம் கோத்தும், காத்தும் கிடக்கிறதாம் இப்பெருங்கடல். இவற்றில் எல்லாம், தான் கலந்திருந்தும், எல்லாவற்றையும் கடந்து நிற்கும் தன் நிலையிலும் (கடவுள்-நிலையிலும்) மாறுபடாமல் இருக்கிறதாம். ஆம், இக்கடலுக்குப் பெயர் கடவுள். இது சச்சிதானந்தக் கடல்.

தெய்வமாக் கடல்

இப்படியெல்லாம் தத்துவக் கடலில் துணிந்து குதித்துவிடுகிறான் கம்பன், ஆரணிய காண்ட முகப்பிலே. ஒவ்வொரு காண்டமும் கடவுள் - வாழ்த்துடனே தொடங்குகிறது. ஆரணிய காண்டம் இராமாயணத்தின் மத்திய பாகம் - இதயப் பிரதேசம். இங்கே தான் ராம ராவண யுத்தத்திற்கு நேரான காரணம் (சீதையை அபகரித்தல்) நிகழ்கிறது. இக் காண்டத்தின் கடவுள் வாழ்த்தும் விசேஷமாக அமைந்து விட்டது போலக் காண்கிறது.

ஒருயிராக எங்கும் நிறைந்து மறைந்து பரந்து கிடக்கும் தெய்வமாக் கடலினை அறிந்து கொள்வதுதான் எப்படி? கம்பனது தெய்வ மாக்கவி,

ஓதி ஓதிஉணர் ருந்தொறும்
உணர்ச்சி உதவும்

[உணருந்தொறும் – உணர்ந்து கொள்ளும் போதெல்லாம்.]
என்று குறிப்பிடுகிறது.


ஓதி ஓதி உணர உணர, மேலும் மேலும் உணர்ச்சியை – மெய்யுணர்வை – உதவிய வண்ணம் அருள் செய்கிறதாம், உயிர்களுக்கெல்லாம் உணர்ச்சிகளுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கும் தெய்வமாக்கடல்.

கடல்போல் முழங்கும் கவிமுரசு

வேதமும் தெரிந்து கொள்ள வில்லையாம் இம்மெய்ப் பொருளை. வேதம் ஓதும் வேதியரும் தெரிந்து கொள்ளவில்லையாம். 'வேதன்' என்று சொல்லப் பெறும் பிரமனும் வேறு தேவர்களும் தெரிந்துகொள்ள முடியவில்லையாம், ஆதி மூலமாகிய இப்பெருங்கடலை,–'ஆதி தேவர்' என்ற தனிப்பெருங் கடலினை.

ஆனால் — என்ன நெஞ்சுத் துணிவு! வேதம், வேதன், வேதியர் முதலோரும் தெரிந்து கொள்ளாத ' ஆதி தேவர் ' என்ற அருட் பெருங்கடல் தன் அறிவினுக்கு அறிவாய்ப் பொங்கிக்கொண்டிருக்கிறது என்று கவிஞன் முழக்குகிறான், கடல் தன் அலைக் கைகளால் முரசு கொட்டுவது போலே:

பேதி யாதுநிமிர் பேதவுரு-
வம் பிறங்கிலா,
ஓதி ஓதிஉணர் ருந்தொறும்
உணர்ச்சி உதவும்,
வேதம் வேதியர்வி ரிஞ்சன்முத-
லோர் தெரிகிலா
ஆதி தேவர்அவர் எம்அறிவி-
னுக்(கு) அறிவரோ!



[பேதியாது - (தன்மையில்) பேதம் அடையாமலே. நிமிர் - நிமிர்கின்ற; தோன்றி வளர்கின்ற. பேத உருவம் - பல பேதங்களான சராசர உருவங்கள். பிறழ்கிலா - (தம் தன்மை) மாறுபடாதவரும். விரிஞ்சன் - பிரமன். தெரிகிலா - அறியமாட்டாதவரும் ஆகிய. அறிவரோ - அறிவு + அரோ. அரோ - அசை.]

'நாம் தேடித் தெரிந்து கொள்வோம்' என்று பல வேறு சாதனங்களாலும் உபாயங்களாலும் முயல்வோர் அறியமாட்டாத ஆதிதேவர், 'எம் அறிவினுக்கு அறிவு' என்று கவி கூறுவது கவனிக்கத் தக்கது. 'கவிஞர்களாகிய எங்கள் அறிவினுக்கு அறிவு' என்று பொருள் கொள்ள வேண்டும். விதி விலக்குகளுக்கு உட்பட்டு நாடுகிறவர்களும் தேடுகிறவர்களும் அறியமாட்டாத பரம்பொருள், கவிஞர்களின் அறிவினுக்கு அறிவாக ஆழ்ந்திருந்து உலகம் உய்ய அரும்பெரும் பொருள்களை யெல்லாம் — ஆணிமுத்து போன்ற உணர்ச்சி - முத்துக்களை யெல்லாம் வாரி இறைத்து வருகிறதாம்.

அழகான உண்மை

எல்லாரும் கவிஞர்களாக இருக்க முடியுமா? மற்றவர்களும், ஓதி ஓதி உணருந்தோறும், மேன்மேலும் நல்லுணர்ச்சிகளை உதவப் பெறுகிறார்களாம். இத்தகைய 'ஆதி தேவர்' என்ற தனிப் பெருங்கடலிலே 'பேதியாத நிமிர் பேத உருவ'ங்களே சிருஷ்டி என்ற அதிசயம். இத்தகைய உலக சிருஷ்டிக்குக் காரணமான பரம்பொருளே கவிஞர்களின் அற்புத சிருஷ்டிக்கும் காரணமாகிறதாம்.

மகாகவிகளை வழிகாட்டிகளாகப் பெற்றிருக்கும் பாக்கியசாலிகளான நாமும், கவிதைகளையும் மற்ற நூல்களையும் ஓதி ஓதி உணர்ந்து உணர்ந்து மேன்மேலும் நல்லுணர்ச்சிகளை, மெய்யுணர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ளலாம். இம்மெய்யுணர்ச்சிகள் — உள்ளொளியிலிருந்து தெறிக்கும் சுடர்ப்பொறிகள் — எல்லாம் 'ஆதிதேவர்' நமக்கு உதவி வரும் அருளின் சான்றுகளே. என்ன வசீகரமான கொள்கை! என்ன அழகான உண்மை!

'ஆதிதேவர்' என்ற அறிவுக் கடலில் ஆடி அகம் கரைந்து நிர்மலனான கவிஞன், இராமன் முதலானவர்களுடன் ஆரணியப் பிரவேசம் செய்கிறான்.

தொந்த யுத்தம்

இன்னும் ஓர் அதிசய உண்மை. எவ்வளவு காலமாக, ஓய்வு ஒழிவில்லாமல் தொந்த யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது! இருளுக்கும் ஒளிக்கும் இடையே, உலகத் திரைக்குப் பின்னே, சூட்சும லோகத்திலே! ஒளியின் சக்தியான தருமத்தை இருளின் சக்தியாகிய அதர்மம் திடீரென்று தந்திரமாகவும் வஞ்சனையாகவும் கீழே மல்லாக்கத் தள்ளிவிடுவதும் உண்டு. இத்தகைய ஒரு கட்டத்திலே தான் சீதா ராமர்களும் லட்சுமணனும் ஆரணியப் பிரவேசம் செய்கிறார்கள்.

தொந்த யுத்தத்தில் முதுகிற்கு மண் காட்டுவதோடு எதிரி திருப்தியடையவில்லையாம். உடனே, உயிர்நிலையாக நெஞ்சில் ஏறி உட்கார்ந்து கொண்டு மூச்சுத் திணற முழுப் பலத்துடன் அமுக்குகிறான். கொஞ்ச நேரத்தில் தருமத்திற்குச் சீவன் போய்விடும்போல் இருக்கிறது! எதிரி முகத்தில் கொலைக்குறி — கொலைவெறி — குதிபோடுகிறது. அந்த இருண்ட முகம் இன்னும் அதிகமாக இருள் அடைகிறது. இதே சமயத்தில், அதோ! இடியிடிப்பதுபோல் ஒரு பெரு முழக்கம் — இராமலட்சுமணர் வில் இரண்டையும் டங்காரம் செய்யும் ஓசைதான்!

அதர்மத்தின் பிடி சிறிது தளர்கிறது. பேச்சு மூச்சில்லாமல் கீழே கிடப்பவன் சிறிது மூச்சுவிடுகிறான். மங்கிய நிலாவைப்போல் இருந்த தருமத்தின் முகத்தில் ஒரு புதிய ஒளி பிறக்கிறது — பொங்கி வரும் புது நிலவு போலே.

அந்த டங்கார இடி மேலும் மேலும் அதிகமாய்க் கேட்கிறது. இருளடைந்த மேனி கிடுகிடென்று நடுநடுங்குகிறது. விழுந்து கிடந்த முகம் தலை தூக்கி, முழக்கம் வரும் வழிமேல் விழி வைத்து, எவ்வளவு நம்பிக்கையோடு நோக்குகிறது!

இந்த நம்பிக்கை கவிஞனைக் கவர்ந்திழுத்துச் சீதாராம லட்சுமணர்களைக் காட்டினிடையே விரைவில் அழைத்துவரச் செய்கிறது.